12 JUN 1965

புத்தக நண்பன்

மலர் 1: இதழ் 2 மார்ச் 1962

ஆசிரியர் :

வி. சுந்தரராஜ் நாயுடு, M. A., B. L., T. D.

இந்த இதழில்

செய்திக் குறிப்புக்கள்

ஓவியரும் வெளியீட்டுத் துறையும்
—இ. எச். கிளிக், எம். பி. கிளிக்

வில்லியம் பிளேக்
—கே. சேஷாத்ரி

புத்தகங்களின் பெருவாரியான விற்பனை
—டி. வி. குஞ்ஞிகிருஷ்ணன்

உலக அமைதிக்கு......
—தி. மாணிக்கவாசகம்

மழையில் நனைகின்ற மனிதன்
—'மஞ்சு ஸ்ரீ'

பிறமொழி எழுத்தாளர் அறிமுகம் :
தத்தாத்ரேய ராமசந்திர பேந்த்ரே
தகழி சிவசங்கர பிள்ளை
ராயப்ரோலு சுப்பாராவு

புத்தகப் பூங்கா

★

புத்தக நண்பன்

தென் மொழிப் புத்தக டிரஸ்ட்

25, ஸ்டெர்லிங் ரோட்,

சென்னை-34.

★

ஆண்டுச் சந்தா : ரூ. 2/-

தனிப் பிரதி : 50 காசு

★

செய்திக் குறிப்புக்கள் :

புத்தக நண்பன் : வெளியீட்டு விழா

தென்மொழிப் புத்தக டிரஸ்டின் முத்திங்கள் இதழான, 'புத்தக நண்பன்' 31-1-1962 அன்று மாலை புது வுட்லாண்ட்ஸ் ஹோட்டலில், மகிழ்ச்சிகரமானதொரு விழாவில் வெளியிடப்பெற்றது. அவ்விழாவில் மதிப்புக்குரிய பெரியோர் பலர் பங்கு கொண்டனர். சுவையுள்ள தேநீர் விருந்திற்குப் பின்னர் விழா துவங்கியது. டிரஸ்டின் பொது நிர்வாகியான திரு. வி. சுந்தரராஜ் நாயுடு அவர்கள் தம் வரவேற்புரையில், நல்ல புத்தகங்களை வெளியிடத் தூண்டவும், 'ராயல்டி' தருவதில் தக்கதொரு முறையை நிர்ணயிக்கவும், புத்தக வெளியீட்டில் தேவையான கலை நுட்பத் துறையில் துணை புரியவும் டிரஸ்ட் எந்த அளவு ஆக்கப்பணி புரிந்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் இந்தப் பத்திரிகையை வெளியிட்டவண்ணம், டாக்டர் பி. வி. செரியன் அவர்கள், நல்ல நூல்களையும், சிறந்த மொழிபெயர்ப்புக்களையும் வெளியிடும் துறையில் டிரஸ்ட் ஆற்றிவரும் பணியைப்

பாராட்டிப் பேசினர். குறிப்பாகக் குழந்தைகளுக்கான நல்ல நூல்களைத் தயாரிப்பது மிகவும் முக்கியம் என்று கூறினர். கலைச்சொற்களை வட்டார மொழிகளில் மொழிபெயர்ப்பதைக் குறித்து அவர் தம் கருத்தைத் தெரிவித்தார். அவற்றைக் கடினமான சொற்றொடர்களில் மொழிபெயர்ப்பதைவிட மூலச் சொற்களை அப்படியே பயன்படுத்துவது எளிது என்று அவர் குறிப்பிட்டார்.

திரு. ஏ. எஸ். பி. அய்யர், டிரஸ்டின் முன்மாதிரியான பணியைப் புகழ்ந்தவாறு, நான்கு மொழிகளிலும் ஒவ்வொரு பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

டிரஸ்டின் வெளியீடான 'தமிழ் எழுத்தாளர்-யார் எவர்?' என்ற நூலையும் இவ்விழாவில் டாக்டர் செரியன் வெளியிட்டு, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரான புலவர் அன்பு கணபதி அவர்களிடம் ஒரு பிரதியைக் கொடுத்தார்.

எங்கள் அழைப்பை ஏற்று விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும், விழாவுக்கான நல்லாசிகளையும், டிரஸ்டின் முயற்சிக்கென பாராட்டுதல்களையும் வாழ்த்துச் செய்திகள் வாயிலாகத் தெரிவித்த அனைவருக்கும் எம் நன்றி.

குழந்தை இலக்கிய அமைப்பு விதிகள்

இத்தாலிய பத்திரிகை வெளியீட்டாளர் சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒருமனதாக ஒத்துக்கொண்டு ஏற்றுக்கொண்ட இலக்கிய அமைப்பு விதிகளைக் குறித்த குறிப்பு 'யுனெஸ்கொ'வின் அண்மையில் வெளி வந்த செய்தி அறிக்கையில் காணப்படுகிறது. குழந்தைகளுக்கான நூல்களின் அமைப்பைக் குறித்த கருத்துக்கள் இதில் அடங்கியுள்ளன. இவை எல்லாப் பதிப்பகத்தாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கவையே.

''தேசிய அல்லது அனைத்துலக மனித சமூகத்தின் அடிப்படையான வாழ்க்கை மதிப்புக்களைக் (Values) குழந்தை நூல்கள் சிறப்பித்துக் காட்ட வேண்டும், ஒழுக்கத்திற்கு எதிரிடையாக ஒருபொழுதும் இந்நூல்கள் இருக்கக்கூடாது'' என்று பொதுப்படையாக இந்த விதிகள் குறிப்பிடுகின்றன.

''குடும்ப ஒற்றுமையைக் குலைப்பவை, எந்த இனத்தின் மீதாவது வெறுப்பைத் தூண்டுபவை, அல்லது எந்த வகையிலேனும் மனிதனின் உயர்வுக்கு இழுக்குத் தேடுபவை'' ஆகியவற்றை இவ்விதிகள் கண்டிப்பாகத் தடை செய்கின்றன. மற்றும், ''குற்றம் புரிவதை வெளிப்படையாக விவரித்தல்; அதிகப்படியான கொடுமை, அல்லது சித்ரவதை முதலிய காட்சிகள்'' ஆகியவற்றைப் பதிப்பாசிரியர்கள் வெளியிடாவண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* * *

அயல்நாட்டில் முதியோர் கல்வி

அமெரிக்காவின் முதியோர் சங்கத்தின் பத்திரிகை ஒன்றில் **இடைவேளை உணவுக் கல்வி** துவக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. முதியோர் கல்விக்கென நியூ ஹாம்ஷையரில் பணி புரிவோரிடையே இத்தகைய கல்வி துவக்கப்பட்டிருக்கிறதாம். ''நீங்கள் திடீர் காபியை அருந்தினீர்கள், இப்பொழுது திடீர் கல்விக்குச் செல்லுங்கள்'' என்ற தலைப்பில், ''ஒருவாய் உணவு உண்ட பின்னர் வகுப்புக்குச் செல்லுங்கள்'' என்று விளக்கி அக்கல்வியில் அவர்கள் பயிலக்கூடிய பல்வேறு துறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் முதியோர்க்கென நடத்தப்படும் இரவுப் பள்ளிகள் நம் நினைவுக்கு வருகின்றன. ஆனல் நம் முதியோர்ப் பள்ளிகளில் முதியவர்கள் அமெரிக்கரைப்போல் அக்கறை காட்டுகின்றனரா? என்பது ஐயத்திற்கிடமானதே.

* * *

மிஸிஸிபி அருகில் கிராமீய மக்களிடையே சிறந்த உண்மை ஒன்று விவரிக்கப்பட்டது: '' ஒரு மனிதன் ஒவ்வொரு நாளும் 15 நிமிடங்கள் படித்துவந்தால் ஒரு மாதத்தில் இரண்டு புத்தகங்களைப் படிக்கலாம், ஒரு வருடத்தில் 24 புத்தகங்களைப் படிக்கலாம்—இவ்வாறு அவன் வாழ்நாளில் 1000 புத்தகங்களைப் படிக்கலாம்.'' படிப்பது எவ்வளவு எளிது—அதனல் விளையும் பயன் எவ்வளவு பெரிது!

* * *



புத்தகக்—கலை விழா : தமிழ் நாட்டு கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி தலைமையில், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் துவக்கி வைத்தார்.

இடமிருந்து வலமாக: திரு. சி. கே. மாணி (தலைவர்—தென்னிந்திய புத்தகத் தொழில் குழு), டாக்டர் ஏ. எல். முதலியார், கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி, திரு. எஸ். கோவிந்தராஜுலு (தலைவர்—தென்மொழிப் புத்தக டிரஸ்ட்.)

'தமிழால் முடியும்'—திரு. சி. சுப்பிரமணியம்

புத்தக உலகில் அண்மையில் நடைபெற்ற பல்வேறு விழாக்களில் குறிப்பிடத் தக்கது, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் 'தமிழால் முடியும்' என்ற நூலின் தொடர்பாக, அதன் வெளியீட்டாளரான வள்ளுவர் பண்ணையார் நடத்திய வெளியீட்டு விழாவாகும். முன்னாள் தமிழ்நாட்டு நிதி–கல்வி அமைச்சரான திரு. சி. சுப்பிரமணியம் அவர்தம் சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூல். அலுவலகங்களிலும், மற்றும் பல துறைகளிலும் சிறந்ததொரு ஊடகமாகத் தமிழ் நன்கு பயன்பட முடியும் என்பதை விளக்குவதற்கான அவருடைய பேச்சுக்கள் அனைத்தையும் சொல்லுக்குச் சொல் விடாமல் எழுதிய திரு. நமசிவாயம் அவர்கள் இந்நூலைத் தொகுத்தார். 30—1—62 அன்று ஒரு சிறப்பான விழாவில் இந்நூல் வெளியிடப்பட்டது. திரு. சுப்பிரமணியத்தின் 'நான் சென்ற சில நாடுகள்' என்ற மற்றொரு நூலைச் சில நாட்களுக்கு முன்னர் வெளியிட்ட, திரு. எஸ். எஸ். வாசன் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கினர். திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி இந்நூலை வெளியிட்டார். டாக்டர் ஏ. சி. செட்டியார், டாக்டர் மு. வரதராசனர், திரு. கி. வ. ஜகந்நாதன் ஆகியோர் இச்சிறந்த நூலின் ஆசிரியரையும், வெளியீட்டாளரையும் பாராட்டிப் பேசினர்.

* * *



புத்தகக்—கலை விழா: பொருட்காட்சியில் கவர்னர் திரு. மேதி அவர்கள் சிலவற்றைப் பார்வையிடுகிறார்

தெலுங்குக் கலைக்களஞ்சியம்—மேலும் மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டன

தெலுங்குக் கலைக்களஞ்சியத்தின் நான்கு, ஐந்து, ஆறுவது தொகுதிகளை, ஆந்திர பிரதேஷ் முதன் மந்திரி திரு. டி. சஞ்சீவைய்யா, ஹைதராபாதில் உள்ள ஆந்திர யுவதி மண்டலி ஹாலில் 28—1—62 அன்று சிறப்பான தொரு விழாவில் வெளியிட்டார். கலைக்களஞ்சியத்தைத் தயாரிக்கும் பொறுப்பேற்றுள்ள 'தெலுகு பாஷா சமிதி'யின் துணைத்தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். பி. ராமகிருஷ்ண ராஜு இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்.

இக் கலைக்களஞ்சியத்தின் நான்காவது தொகுதி தெலுங்குப் பண்பாட்டைக் குறித்த இரண்டாவது பகுதியாகும்; ஐந்தாம் தொகுதி பொருளாதாரம், வாணிபம், புவியியல் முதலிய மூன்றையும் அடக்கியுள்ளது; ஆறும் தொகுதி உலக இலக்கியங்கள் (விஸ்வ சாஹிதி) பற்றியதாகும்.

'தெலுகு பாஷா சமிதி' பொருளமைப்புக் குத்தக 16 தொகுதிகளில் கலைக்களஞ்சியத்தை வெளியிடத் துவங்கியது. ஏற்கனவே வெளி வந்த மூன்று தொகுதிகள்: (1) வரலாறு—அரசியல், (2) பௌதிகம்—இரசாயனம், (3) தெலுங்கு பண்பாடு—1 (பகுதி) ஆகும்.

சமிதியின் செயலாளரான பத்மபூஷன் எம். சத்யநாராயண, இப்பொழுது தயாரிக்கப்படும் கலைக்களஞ்சியத்தின் 16 தொகுதிகள் முடிந்த பிறகு, 'பிரிட்டானிகா' கலைக்களஞ்சியம் (Encyclopaedia Britannica) போன்ற வகையில் அகர வரிசைக் கலைக்களஞ்சியம் ஒன்றைத் தயாரிக்க இருப்பதாகத் தம் அறிக்கையில் கூறினர்.



'தென்னிந்திய எழுத்துத் துறையில் அண்மை வளர்ச்சி' கருத்தரங்கு—இடமிருந்து வலம் : திரு. ந. சஞ்சீவி (தமிழ்), திரு. பி. பத்மராஜு (தெலுங்கு), திரு. வி. சுந்தரராஜ் நாயுடு (கருத்தரங்கின் தலைவர்), திரு. சங்கர கெதிலாயா (கன்னடம்), திரு. கெ.என். எழுத்தச்சன் (மலையாளம்)

இந்தக் கலைக்களஞ்சியத் தொகுதிகளை வெளியிட்ட திரு. சஞ்சீவைய்யா, சமிதியின் பயனுள்ள பணியைப் பாராட்டியதுடன், அப்பணி முற்றுப்பெற போதுமான பண வசதி தரப்படும் என்றும் கூறினர்.

*   *   *

'யுனெஸ்கோ'வின் ஆதரவில் **தென்மொழிப் புத்தக டிரஸ்ட்** அடுத்த மே மாதத்தில் ஒரு **கருத்தரங்கை** நடத்த இருக்கிறது. தென் இந்தியாவின் புத்தகத்துறையின் பல்வேறு அங்கங்களிடையே கூட்டுறவை வளர்க்கும் நோக்கத்துடன், இலக்கியம் படைக்கும் துறையில் உள்ள அலுவலர் சங்கங்களின் வளர்ச்சியைக் குறித்து இக்கருத்தரங்கு அமையும். இக்கருத்தரங்கில் நான்கு தென்னிந்திய மொழிப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

*   *   *

'யுனெஸ்கோ' பரிசு பெற்ற 8 நூல்கள்

அண்மையில் வெளி வந்த ஐந்து ஹிந்தி நூல்களும், மூன்று தமிழ் நூல்களும் 'யுனெஸ்கோ'வின் பரிசுகளைப் (ஒவ்வொன்றுக்கும் ரூ. 1900) பெற்றிருப்பதாக இந்திய அரசினர் அறிவித்துள்ளனர். தமிழில் பரிசு பெற்ற மூன்று நூல்களும் தென்மொழிப் புத்தக டிரஸ்டின் ஆதரவில் வெளியிடப்பட்டவை என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம். அவை பின்வருவன :

1. மந்திர வித்தை — திரு. எம். எல். சபரிராஜன்.
2. வானத்தைப் பார்ப்போம் — திரு. பி. என். அப்புசாமி, திரு. ஜே. பி. மாணிக்கம்.
3. நமது உடல் — கேப்டன் என். சேஷாத்திரிநாதன்.

மொழிபெயர்ப்புக் கருத்தரங்கு—இடமிருந்து வலமாக: திரு. ஏ. என். ஷ்வார்ட்ஜ் (தென்னிந்திய புத்தக வெளியீட்டாளர் சங்கம்), திரு. மஞ்சேரி எஸ். ஈஸ்வரன் (தேசிய புத்தக டிரஸ்ட்), திரு. ஆர்தர் ஐசன்பர்க் (கருத்தரங்கின் தலைவர்), திரு. கே. சேஷாத்ரி (தென் மொழிப் புத்தக டிரஸ்ட்), டாக்டர் கே. எம். ஜார்ஜ் (சாகித்ய அகாதெமி).

புத்தகக்—கலை விழா

மார்ச் 4-ஆம் நாள் முதல் 11-ஆம் நாள் வரை இடைப்பட்ட வாரத்தில் புத்தக உலகத்தில், புத்தகப் பணியில் ஈடுபட்டுள்ளோரால் சிறந்த விழா ஒன்று கொண்டாடப் பட்டது. இந்தப் புத்தகக்—கலை விழா, தென்னிந்திய புத்தகத் தொழிற் குழுவால், பல்கலைக் கழகங்கள், மற்றும் பல புத்தக வெளியீட்டாளர், பங்கீட்டாளர்தம் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்த விழாவை மார்ச் 4-ஆம் நாள் சென்னை கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்களின் தலைமையில், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் துவக்கி வைத்தார். கவர்னர், தம் தலைமையுரையில், புத்தகங்கள் மனித சிந்தனை, முயற்சி ஆகியவற்றின் அழிவற்ற சின்னங்கள் என்றும், தேசிய ஒற்றுமையையும் திட்பத்தையும் வளர்க்க அவை மிக இன்றியமையாதவை என்றும் குறிப்பிட்டார். டாக்டர் இலட்சுமணசாமி முதலியார், தம் துவக்க உரையில், சென்னையில் அமைக்கப் பட்டுள்ளது போன்ற பொருட்காட்சி (புத்தக்க-கலைப் பொருட்காட்சி) ஆண்டு தோறும் அமைக்கப்பட வேண்டியதன் தேவையை வற்புறுத்தினர். மேலும், புத்தகத் தொழிற் குழுவின் ஆதரவில் பொது மக்களின் கருத்துக்களையும், புத்தகத் தேவைகளையும் உணரவும் அளக்கவும் 'நுட்ப அறிவுக் குழு' (Intelligence Section) ஒன்று துவக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறினர்.

இந்த விழாவின் ஆதரவில் முக்கியமான பல வகைப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. இதன் ஆதரவில் சிறப்பு நிகழ்ச்சியாக அமைக்கப்பட்ட பொருட்காட்சியில் இந்தியா, மற்றும் வெளிநாடுகளிலும் கலை மற்றும் அதன் தொடர்புடைய பொருள்களில் வெளியிடப்பட்ட நூல்கள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவையும், சுமார் 100 ஓவியங்களும், தனிப்பட்ட சேகரிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட பல கலைப்பொருள்களும், இசைக் கருவிகளும், கைப்பணிப் பொருள்களும் இடம் பெற்றிருந்தன. மற்றும், துவக்க நாளன்று திருமதி பாலசரஸ்வதியின் பரத நாட்டியமும், முடிவு நாளன்று திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இசைவிருந்தும் இவ்விழாவின் சிறந்த கலை நிகழ்ச்சிகளாகும். மேலும், சில கருத்தரங்குகள், கவிதைப் படிப்பு, உயர்நிலைப் பள்ளி மாணவர்க்கான வினு—விடை நிகழ்ச்சி (Quiz), திரைப்படக் காட்சிகள், கலை குறித்த சொற்பொழிவுகள் முதலியனவும் நிகழ்த்தப்பட்டன.

இவ்விழாவை முன்னிட்டு, தென்மொழிப் புத்தக டிரஸ்ட் தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மொழி இலக்கியங்களில் அண்மைப் போக்கு (Recent trends) என்ற பொருள்பற்றிக் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இக்கருத்தரங்கு டிரஸ்டின் அலுவலகத்தில் நடைபெற்றது. தெலுங்கு இலக்கியத்தைக் குறித்து திரு. பி. பத்மராஜு, தமிழ் இலக்கியம் குறித்து திரு. ந. சஞ்சீவி, மலையாள இலக்கியம் குறித்து கே. என். எழுத்தச்சன் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர்; கன்னட இலக்கியம் குறித்து திரு. மரியப்ப பட் உருவாக்கிய ஆய்வுக் கட்டுரையைத் திரு. எ. சங்கர கெதிலாயா படித்தார். டிரஸ்டின் பொது நிர்வாகி திரு. வி. சுந்தரராஜ் நாயுடு இக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கி நடத்தினர். இலக்கியங்களில், குறிப்பாக விடுதலை பெற்ற பின்னர் தோன்றிய இலக்கியங்களில், எடுத்துக் கொள்ளப்பட்ட கருத்துப் பொருள்கள், கையாளப்பட்ட நடை, மற்றும் அவற்றில் காணப்படும் பல்வேறு புதுமைகள், வேற்றுமொழி இலக்கியங்களின் உறவால் தோன்றிய விளைவுகள் முதலியன இக்கட்டுரைகளில் சுருக்கமான அளவில் நன்கு விளக்கப் பட்டிருந்தன.

'மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்' (Problems of Translation) என்ற தலைப்பில் மற்ருெரு கருத்தரங்கைத் தேசிய புத்தக டிரஸ்ட், சாஹித்ய அகாதெமி, தென்மொழிப் புத்தக டிரஸ்ட், தென்னிந்திய வெளியீட்டாளர் சங்கம் ஆகிய நான்கு அமைப்புக்களின் கூட்டாதரவில் நடத்தப்பட்டது. தேசிய புத்தக டிரஸ்டின் சரர்பில் திரு. மஞ்சேரி எஸ். ஈசுவரன், தென்மொழிப் புத்தக டிரஸ்டின் சார்பில் பேராசிரியர் கே. சேஷாத்ரி, சாஹித்ய அகாதெமியின் சார்பில் டாக்டர் கே. எம். ஜார்ஜ், தென்னிந்திய வெளியீட்டாளர் சங்கத்தின் சார்பில் திரு. எ. என். ஷ்வார்ட்ஜ் முதலியவர்கள் தம் கருத்துரைகளைப் படித்துதவினர்.

* * *

சாஹித்ய அகாதெமியின் பரிசுகள்

1958 லிருந்து 1960 வரை வெளியிடப்பட்ட சிறந்த நூல்களுக்குப் பரிசுகளை சாஹித்ய அகாதெமி அண்மையில் வழங்கியுள்ளது. இவ்வாண்டு அகாதெமியின் பரிசு டாக்டர் மு. வரதராசனரின் 'அகல் விளக்கு' என்ற அரிய புதினத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது போன்றே தெலுங்கில், பாலாந்த்ரபு ரஜனி காந்த ராவ் அவர்களின் ஆந்திர 'வாக்கேயகாருல சரித்ர' (ஆந்திர இசை அறிஞர்கள் வரலாறு) என்ற நூலுக்கும்; கன்னடத்தில் டாக்டர் ஏ. ஆர். கிருஷ்ண சாஸ்திரி அவர்களின் 'பங்கிம் சந்த்ர' என்ற திறனய்வு நூலுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. பரிசு பெற்ற நூலாசிரியர்களைப் பாராட்டி அவர்கள் தம் இலக்கியப்பணி மேன்மேலும் சிறக்கவேண்டுமென வாழ்த்துகிறேம்.

ஓவியரும் புத்தக வெளியீட்டுத் துறையும்

எம். பி. கீளிக்—இ. எச். கீளிக்

ஓவியருக்கும் பதிப்பகத்தாருக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் குறித்து, வரை படக் கலைஞரான டபிள்யூ. ஏ. டிவிக்கின்ஸ் (W. A. Dwiggins), இருபதாண்டுகளுக்கு முன்னர் இடித்துரைக்கும்பாணியில் ஒரு கட்டுரையை எழுதினர். அழகிய தலைப்புக்களை எழுதுபவரும், விளக்கப் படங்களை வரைபவரும், ஒப்பனை செய்பவரும், புத்தக அமைப்பினைத் திட்டமிடுபவருமான திரு. டிவிக்கின்ஸ் 'தி அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் கிராபிக் ஆர்ட்ஸி'ன் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். புத்தக வெளியீட்டாளர், ஓவியர்கள் ஆகியோரின் இருவேறுபட்ட நோக்கங்களையும் நன்குணர்ந்தவர்கள் அவரைப் போன்றவர் மற்றவர் யாரும் இலர்.

டபிள்யூ. ஏ. டி. (W.A.D.) என்று பரவலாக வழங்கப்பெற்ற அவர் 1941ஆம் ஆண்டில் கூறியவை தற்பொழுதும் பொருத்தமானவையாகவே உள்ளன. புத்தகங்களைப் படிப்போரும் விரும்புவோரும் பன்மடங்கு பெருகியுள்ள இந்நாட்களில் அவர் கூறிய கருத்துக்கள் மேலும் தேவையானவை என்று கூடக் கூறலாம். புத்தகங்களில் விருப்பமும், அவற்றின் தேவையும் பெருகப் பெருக, வெளியீட்டாளரும், படிப்பவருமாகிய பல்வேறு மக்களும், நல்ல படங்கள் சேர்த்தல், ஒப்பனை செய்தல், நன்கு உருவாக்குதல் அகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்கின்றனர். எனவே, ஓவியருக்கும், புத்தக வணிகன்—அதாவது வெளியீட்டாளருக்கும் இடையே நல்லெண்ணம் வளரவேண்டும் என்பது உலகப் பொதுத் தேவையாகும்.

திரு. டிவிக்கின்ஸ் சிந்தனையையும், செயலையும் தூண்டக்கூடிய வகையில் வன்மையுடன் தாக்கும் சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளார். வியாபார நோக்கமுடையவருக்கும் ஓவியருக்கும் இடையே உள்ள ஆழ்ந்த கருத்து வேறுபாட்டைக் குறித்துக் கூறும் பொழுது, முன்னவர் விற்பனைக்கென்றே பொருளை உருவாக்குகிருர் என்றும், ஆனல், பின்னவரோ அதன் அமைப்பு அல்லது செயல்முறைப் பயன் அல்லது ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றைப் பற்றியே எண்ணமிடுகிருர் என்றும் கூறியுள்ளார். ஓவியருக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள தொடர்பினை இந்த வேற்றுமை எவ்வாறு பாதிக்கிறது?

"ஒன்றினை உருவாக்குதல், அமைத்தல் அல்லது செயல்படுத்தல் ஆகியவற்றில் கலைஞர் தம் நடையை (style) முக்கியமாக மதிப்பிடுகிருர். நடை என்பதற்கு இந்த இடத்தில் தனிப்பட்டதொரு பொருள் உண்டு. ஒரு 'கோல்ஃப்' (Golf) பந்தினை அடிப்பது, 'டென்னிஸ்' விளையாடுவது, நீந்துவது, நடப்பது ஆக எதுவாயினும் அதற்கென ஒரு சிறந்த வழி உள்ளது. விளையாட்டு உலகத்தில் இந்தச் சிறந்த வழி 'முறை' (form) எனப்படும். கலையுலகில் இந்தச் சிறந்தவழி 'நடை' எனப்படும். ஒன்றினை முடிக்கப் பயன்படுத்தப்படும் மிக எளிய, நயமுள்ள ஆற்றல் வாய்ந்த வழியே 'நடை' ஆகும்."

'நடை'யின் மதிப்பு ஓவியர் அளவிலேயே நின்று விடுவதில்லை என்று திரு. டிவிக்கின்ஸ் குறிப்பிடுகிருர். ஓவியரே சிறந்த நடையில் ஓர் ஓவியத்தை உருவாக்க முடியும். இருப்பினும், 'நடை'யின் மதிப்பினை நாம் ஒப்புக் கொள்கின்ற காரணத்தால், அடிப்படையான

கலைப்பசியையும், ஓவியரின் படைப்பினையும் நாம் உணர்கிறோம் என்பது தெளிவு.

வெளியீட்டாளர்—ஓவியர் தொடர்புகளில் மிகவும் அடிப்படையான தேவை தகுதியுள்ள ஓவியர் கிடைப்பதே ஆகும். "ஓவியர்கள் அனைவரும் வியாபார நடைமுறைகளில் பயிற்சி பெற்றவரல்லர்." ஓவியருக்கிடையே ஒருநிலைப்பாடு இல்லாததாலும், ஓவியம் வரைதல், திட்டமிடுதல் ஆகியவற்றில் பல்வேறுபட்ட தேவைகள் இருப்பதாலும் எத்தகைய திட்டவட்டமான விதிகளையும் அமைக்க இயலாது.

"மற்ற எந்தச் செயல்தலைவரிடம் நாம் காண விரும்பும் பண்புகள் அனைத்துடன் அவர் கலைத்திறனும் சேர்ந்து ஓவியரிடம் காட்சி அளிக்கும். அவருடைய மனிதத் தன்மையை எடைபோடுவதற்கு உங்களுக்குத் திறமை இருக்கலாம். ஆனால், அவருடைய கலை அளவை அளக்க உங்களால் இயலுமா ?" அதற்குச் சில பயனுள்ள கருத்துக்கள் இங்குத் தரப்படுகின்றன : "இதற்கு முன்னர் அந்த ஓவியரைப் பயன்படுத்தியவர்களிடமிருந்து அவருடைய திறமையை அறிந்து கொள்ளலாம்." "அந்த ஓவியரைப் பற்றிப் பிற ஓவியர் தரும் குறிப்புக்களில் அதிக நம்பிக்கை வைக்கக் கூடாது." "ஓவியர் உண்மையைச் சொல்லக் கூடியவராக இருப்பின், உங்களுடைய குறிக்கோளைத் தெளிவாக விளக்கி விட்டால், உங்கள் தேவையை நிரப்பக்கூடிய அளவிற்குத் தக்க தகுதிகளைப் பெற்றுள்ளாரா—இல்லையா ? என்பதை அவரே கூறி விடுவார்." "உண்மைத் திறனுள்ள ஓவியர் பொதுவாக எளிய உள்ளத்தைப் பெற்றிருப்பார், தவறான எண்ணங்களை உண்டாக்குபவராக இருக்கமாட்டார். ஒரு குறிப்பிட்ட துறையில் திறமை பெற்றிராமல் மற்றொரு துறையில் பெற்றிருப்பாரே ஆயின் அதை அவரே சொல்லி விடுவார்."

ஓவியரின் கலைப்படைப்பைப் பார்த்த பிறகே பதிப்பகத்தார் அவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஓவியரின் பழைய படைப்புக்களைப் பார்த்து ஆராய்ந்து,தற்பொழுதுள்ள பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண முடியுமென்று பார்ப்பதே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு வழிகோலும். இருப்பினும், முன்பு செய்ததைப் போலவே செய்ய வேண்டும் என்று கூறப்படுவதைப் புதியன படைப்போர் விரும்புவதில்லை. புதிய பிரச்சினை பழைய பிரச்சினையிலிருந்து சில முறைகளிலாவது வேறுபடும்; எனவே புதிய சிந்தனையும் தேவைப்படும்.

திரு. டிவிக்கின்ஸ், மேலும் தொடர்ந்து "ஓர் ஓவியரின் தகுதியை அவருடைய ஆடைகளை வைத்து நிர்ணயிக்கக் கூடாது; மற்றும் அவர் பேசுகின்ற முறை அல்லது சொற்களை வைத்தும் எடைபோடக் கூடாது. இவை யாவும் மேற்போக்கானவை ஆகும்; இவற்றிலிருந்து அவருடைய கலைத்திறமையை நாம் உணர்ந்து கொள்ளமுடியாது" என்று கூறியுள்ளார்.

ஒரு புத்தகத்திற்குப் பொருந்தக் கூடிய, மனத்திற்குத் திருப்தி அளிக்கும் அல்லது கிளர்ச்சியூட்டும் ஓவியங்கள் அமைய சில அடிப்படைத் தேவைகள் உள்ளன : வெளியீட்டாளர் தம் உள்ளக் கருத்தினையும், தான் உருவாக்கப் போகும் முறையினையும், ஓவியருக்கு இருக்கக் கூடிய காலவரையறையையும், இவற்றிற்கென ஒதுக்கப்படக் கூடிய தொகையினையும் முதலிலேயெ ஓவியரிடம் குறிப்பாகச் சொல்லவேண்டும். சுருக்கமாக, வெளியீட்டாளர் ஓவியரை ஆக்க வேலைக்குரிய அறிவுரை தருபவராகக் கருதவேண்டும் ; அத்தகைய அறிவுரையாளரின் கருத்துக்கள், கற்பனை, திறமை முதலியவற்றை வெளிக் கொணர்ந்து அவற்றின் வாயிலாகத் தன் வெளியீட்டின் தரத்தை உயர்த்த வேண்டும்.

திரு. டிவிக்கின்ஸ் மேலும் சில நல்ல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் : "உமக்குரிய ஓவியரைத் தேர்ந்தெடுத்தபிறகு, உடல் நலத்திற்கென நீர் பார்க்கச் சென்ற மருத்துவரைக் கலந்தாலோசிப்பதைப் போல அவரிடம் பழக வேண்டும்—நீர்க் குழாயிலுள்ள குறையை நிரப்ப அழைப்பித்த குழாய்ச் சரிப்படுத்துபவரிடம் (Plumber) நடந்து கொள்வதுபோல் ஓவியரிடம் நடந்து கொள்ளக் கூடாது. உங்களுடைய நோயைக் குறித்து அவர் முழுவ

தும் புரிந்து கொண்டாரா என்று நிச்சயப் படுத்தி, பிறகு அவர் தரும் மருந்தினைப் பயன் படுத்த வேண்டும். மருத்துவர் எவ்வாறு வரையறை இட்டாரோ அதற்குத்தக மருந் தினைக் குடிக்க வேண்டும்; இரண்டு வேளை குடிக்கவேண்டிய மருந்தினைச் சேர்த்து ஒரே வேளையாகக் குடித்துவிட்டு மூன்றுவது வேளை குடிக்காமல் விட்டு விடுவதால் கருதிய பயன் விளையாது. அவர் கூறிய முறையில் பயன் படுத்தியும் நோய் குணமாகவில்லை என்றுல் வேறொரு மருத்துவரைக் காண்பது நல்லது.

புத்தக உலகம் ஒவ்வொரு படித்த ஆணுக் கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும் அறிவுத் துறையிலும் உணர்ச்சி நிறைவுத் துறையிலும் எவ்வளவோ தருகின்றது. எனவே அதன் உள்ளியல்பு எந்த அளவு நிரப்பப்பட முடியுமோ அந்த அளவு நிரப்பப்பட வேண்டும். ஓவியர் உலகப் படங்கள், அல்லது மக்கள், இடங்களைக் குறித்த ஓவியங்கள் அல்லது தலைப்புக்கள், வண்ண ஒப்பனைகள் முதலியவற்றில் எந்த ஒன்றில் ஈடுபட்டாலும், ஆசிரியர் படிப்போருக்கிடையே நல்லதொரு தொடர்பை வளர்ப்பதுடன், எல்லா மக்களின் அறிவு நுட்பத்தையும், பண்பாட்டையும் வரையறுக்க முடியாத அளவுக்கு உயர்த்த முடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

உலகத்திலுள்ள கடல்களையெல்லாம் தம் மிடையே அடக்கியுள்ள முப்பெருங் கடல் களின் (Oceans) மொத்தப் பரப்பளவு 13·9 கோடி சதுர மைல்களாகும்-அதாவது, உலகத்தின் மொத்தப் புறப்பரப்பில் முக்கால் பகுதி ஆகும். இக்கடல்களின் மொத்த கன அளவு 33 கோடி கன மைல்களாகும்.

பெருங்கடலின் மையத்தில்தான் மிக ஆழமான பகுதிகள் உள்ளன என்பது தவறு; கண்டங்கள் அல்லது தீவுத் தொகுதிகளின் அருகிலேயே பெருங்கடலின் மிக ஆழப் பகுதிகள் உள்ளன.

அட்லாண்டிக் பெருங் கடலின் அடிப் பகுதியில் மைய அட்லாண்டிக் மலைத் தொடர் (Mid Atlantic Ridge) என்ற மலைத் தொடர் உள்ளது; இது கண்டங்களைப்போலவே வட-தென் திசையை நோக்கி அமைந்துள்ளது.

பசிஃபிக் பெருங்கடல், மகல்லன் (Magallen) என்பவரால் அவ்வாறு பெயரிடப்பட்டது. கி. பி. 1520-21 ஆம் ஆண்டுகளில் அவருடைய கடல் பயணத்தின்போது இக்கடலின் அமைதியைக் கண்டு அவ்வாறு பெயரிட்டாராம்.

அட்லாண்டிக் பெருங்கடல், ஆஃபிரிக்காக் கண்டத்தின் அட்லாஸ் மலைகளுக்கு மேற்கே இருப்பதாகச் சொல்லப்பட்ட புராணப் புகழ் பெற்ற கண்டத்தின் அடிப்படையில் பெயரிடப்பட்டது.

பெற்றோர் யாரும் தம் குழந்தைகள் அழகற்றவர்களாக உள்ளனர் என்று கருதுவதில்லை; இவ்வாறே தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் பழக்கம் தம் குழந்தைகளைவிட தம் மனக் குழந்தைகளைப் பொறுத்தவரை மேலும் அதிகமாக உள்ளது.

—செர்வான்டிஸ்

வில்லியம் பிளேக்

கே. சேஷாத்ரி

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு சாதாரண லண்டன் குடும்பத்தில், வில்லியம் பிளேக் பிறந்தார். அவருடைய தந்தை ஓர் ஐரிஷ்காரர்; அவருடைய தாயார் 'அநேகமாக ஆங்கிலேயப் பெண்ணாக' இருந்திருக்க வேண்டும். "பல ஆங்கிலக் கலைஞர்கள், கவிஞர்களைப் போல அவரும் லண்டனில் பிறந்தார்; அத்துடன், பல சிறப்புற்ற தத்துவ ஞானிகள், எழுச்சியுற்ற யோகிகளைப்போல் அவரும் ஒரு கடையிலேயே உருவானார்" என்று செஸ்டர்டன் குறிப்பிட்டுள்ளார். யோகிகளுக்கும் கடைகளுக்கும் என்ன தொடர்பிருக்க முடியும் என்ற ஐயம் எழுவது இயற்கை. இருப்பினும், கம்பளத் துணி வணிகர் ஒருவரின் மகனான வில்லியம் பிளேக் ஓவியராகவும், கவிஞராகவும், தத்துவ ஞானியாகவும், யோகியாகவும் விளங்கினார் என்பது உண்மையே. "பழைய, மரபு வழிப்படியே அவருக்குப் பழக்கங்களும், ஒழுக்க முறைகளும் கற்பிக்கப்பட்டிருப்பினும் குழந்தைப் பருவத்திலிருந்தே அவர் ஒரு தனித்தன்மையை வெளிப்படுத்தினார்." குழந்தைப் பருவத்திலேயே அவர் மரபுப்படி பள்ளிப்படிப்பிலும், ஒழுங்கு முறை விதிகளுக்கும் கட்டுப்படாது, கற்பனையுடன் கூடிய நுண்ணறிவுக்கான அறிகுறிகளைப் பெற்றிருந்தார். அவருடைய குறிப்புப் புத்தகத்தில் அவர் குறித்துள்ள இரண்டு வரிகள் குறிப்பிடத்தக்கன: "அறிவிலியின் பாதையில் பழகி அடித்து நொருக்கப்படுவதற்கென நான் என்றும் பள்ளிக்கனுப்பப்படவில்லை என்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்."

அவருடைய குழந்தைப் பருவம் அல்லது சிறு பருவத்தைப்பற்றி அதிகமான குறிப்புக்கள் நமக்குக் கிடைக்கவில்லை எனினும் கிடைத்துள்ள சிலவற்றிலிருந்து குழந்தைப் பருவத்திலேயே அறிவுக்கெட்டாத பார்வையாற்றலைப் பெற்றிருந்தார் என்பது தெளிவாகிறது. நான்கு வயதிருக்கும் பொழுது, "அவரை சன்னல் வழியாகக் கடவுள் பார்த்ததால் அச்சம் ஏற்பட்டதாகக்" கூறியுள்ளார். இந்தக் கூற்றைத் தக்க காரணங்கள் காட்டி விளக்க இயலாது என்றாலும் அவருடைய பிற்கால வாழ்க்கையை நோக்கும்பொழுது குழந்தைப் பருவத்தில் இவ்வாறு நிகழ்ந்திருந்தாலும் வியப்படைவதற்கில்லை. ஒருமுறை அவர் சற்று அதிக நேரம் வயல் வெளிகளில் தங்கிவிட்டு, நேரம் கழித்து வீட்டிற்கு வந்து தன் தாயாரிடம், எசேக்கியல் தீர்க்கதரிசி (Prophet Ezekial) ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்ததைத் தான் பார்த்ததாகக் கூறினார். பிளேக் வாழ்ந்த அதிசய உலகத்தின் முதல் அனுபவமே இது என்று கூறினால் தவறாக இருக்காது. சிறிது காலத்திற்குப் பிறகு பெக்காம் (Pecham) என்ற இடத்தில், ஒரு மரம் நிறைய தேவதூதர்கள் இருந்ததை அவர் கண்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. தனக்குப் புறம்பான உருவெளித் தோற்றத்தை அந்தச் சிறிய வயதிலேயே அவர் பெற்றிருந்தார் என்பது தெளிவாகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் கதிரவன் தோற்றம் குறித்து எழுதிய பாடல் ஒன்றில் "எண்ணற்ற தேவர் கூட்டமொன்று 'தூய்மை, தூய்மை, தூய்மையே உருவானவர் எல்லாம் வல்ல இறைவர்' என்று கூவுவதைப் பார்க்கிறேன். சன்னல் வழியாகக் காணப்படும் காட்சியைப்போலவே உடல் சார்ந்த அல்லது உணர்ச்சியற்ற என் கண்களைக் குறித்து நான் ஐயப்படுவதில்லை. சன்னல் வழியாகத்தான் நான் காண்

திருவனந்தபுரம் வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு.

கிறேனே ஒழிய அதனுடைய துணையுடன் அல்ல.''

இத்தகைய தனித்தன்மையைப் பெற்றிருந்த சிறுவனான பிளேக், தன் பத்தாவது வயதில் சாதாரண பள்ளிக்குப் போவதற்கு மாறாக, ஓவியப் பள்ளியில் படிக்கத் துவங்கினார்; பிறகு, தன் பதினைந்தாவது வயதில் 'லிங்கனின் இன் ஃபீல்ட்ஸி'ல் ஒரு செதுக்குவோரிடம் (engraver) ஏழாண்டுப் பயிற்சியைத் துவக்கினார். அவருடைய கலைநுட்பம் சாலச் சிறந்தது. அவர் வாழ்நாள் முழுவதும் சிறந்த தொழிலாளியாக விளங்கினார். அவர் தன் கலையில் தனக்கென ஒரு சிறந்த நடையை வகுத்துக்கொண்டார். அவர் தன் உருவெளித் தோற்றத்தில் கண்ட யார் யாரிடத்திலிருந்தோ நல்ல பல அறிவுரைகளை ஏற்றுக்கொண்டாராம். 'பிளேக்'கின் வரலாற்றைச் சுருக்கிக் கூறவேண்டுமானால், அது ஒரு சாதாரண செதுக்குவோன் சிறந்த ஓவியரான வரலாறே ஆகும். அவருடைய கலைத்திறனின் உட்கருவானது, கவிதையின் கற்பனையிலும், யோக நுட்பத்திலும் மட்டுமல்லாமல் சிறந்த செதுக்குவோனின் கலை நுட்பச் சிறப்பிலும் அடங்கி இருக்கக் காணலாம். "உருவமைக்கும் கலையை மரத்தில் செதுக்குவதும் கல்லில் வடிப்பதும் கலைத்துறையில் எதிர்பாராத நிகழ்ச்சி என்று அவர் கருதவில்லை. குறிப்புப் படம் வரைவதாயினும் அவர் தன்னைச் சிற்பியாகவே கருதுவதில் பெருமை கொண்டார்.'' அவர் கவிதைகளைப் புனைந்ததுடன் நில்லாது, பக்கங்கள் தோறும் ஓவியங்கள் முதலியவற்றை வரைந்ததுடன், தம் நூலைத் தாமே உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சு கோத்து அதிலிருந்து நூலை அச்சடிப்பதற்கு மாறாக, நூலின் ஒவ்வொரு பக்கத்தையும் தாமிரத் தகட்டில் படம் வரைவதைப் போல செதுக்கி, ஒளி அச்சு முறை (Illuminated Printing) என்ற முறைப்படி பிரதிகளைத் தயாரித்தார். இது பிளேக்கின் தனித்தன்மை வாய்ந்த சீரிய முறையாகும்.

எந்த அளவில் நின்று பார்ப்பினும் பிளேக் கலைஞர் என்பதில் ஐயமில்லை. ஓவியர், இசைவல்லுநர், செதுக்குவோர் அச்சு வல்லுநர், உணர்ச்சிப் பாவலர், புரட்சித் தத்துவ வல்லுநர், கவியோகி—ஆக இத்தனைப் பேரும் இயைந்த ஒருருவமே பிளேக் ஆவார். பிளேக்கின் ஓவியங்கள் தன் காலத்திய இளம் ஓவியர்களை ஓரளவு கவர்ந்தது என்பது உண்மையே எனினும், அவர் ஒரு கவிஞர் என்பது அவர் காலத்தில் பலருக்குத் தெரியாது. இதற்கு முக்கியக் காரணம் அவர் நூல்கள் சாதாரண முறையில் வெளியிடப் படாததே ஆகும். கி. பி. 1827-ல் அவர் இறந்த பின்னர் சுமார் நூறாண்டுகளுக்குப் பிறகுதான் அவருடைய கவிதைகளின் தொகுப்பு வெளியிடப்பட்டது. பதினெண்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், 'பயிற்சி இன்மை மற்றும் அனுபவம் குறித்த கவிதைகள்' (Songs of Innocence and Experience), 'கவிதைக் குறிப்புக்கள்' (Poetical Sketches) முதலிய அவருடைய சில கவிதைகள் வெளியிடப்பட்டன எனினும், புலமை நிறைந்த முழுமை வாய்ந்த தொகுப்பு இருபதாம் நூற்றாண்டிலேயே வெளி வந்தது.

பிளேக்கின் ஆக்கவழிச் சிந்தனை மூன்று படிகளாக வரையறுக்கப்படும். அவற்றில், 'பயிற்சி இன்மை குறித்த கவிதைகள்' முதல் படியாகும். இம் மூன்று படிகள், வாழ்க்கையின் மூன்று பருவங்களான 'பயிற்சி இன்மை', 'அனுபவம்', 'பயிற்சி இன்மையைத் திரும்பப் பெறுதல்' ஆகிய மூன்றுமே ஆகும். 'ஆட்டுக்குட்டி'யில் அடிப்படையான அமைதியும், எளிய இயற்கையான துவக்க காலத் தெளிவு இல்லாத தன்மையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 'குழந்தை'யின் பொய்யான அறிவால் விளையும் பிரிவினை உணர்ச்சியால் தொல்லைப்படுவதைக் கூறி, அதன் வாயிலாகத் தன்னுணர்வை அறிமுகப்படுத்தி, படிப்பவரை மனப்போராட்டத்தின் இறுதிநிலையான அனுபவத்தின் எல்லைக்குக் கொண்டு செல்கிறார். எனவே, 'பயிற்சி இன்மை குறித்த கவிதை'களுக்குப் பிறகு 'அனுபவக் கவிதை'கள் பிறந்ததில் வியப்பில்லை. 'அனுபவக் கவிதை'களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது 'புலி'

(Tiger) என்ற கவிதையே ஆகும். வாழ்க்கையின் கிளர்ச்சி, சுறுசுறுப்பு, மூர்க்கம் ஆகிய அனைத்தையும் அக் கவிதை வெளியிடுகின்றது. படைப்புச் சக்தியின்—வலிமையும் ஊக்குவிசையும் உள்ள உலக வாழ்க்கையின் பிரதிபிம்பம் 'புலி' எனலாம். உள்ளத்தைக் கவரும் பெருமையும், கருத்துச் செறிவும் நிறைந்த இப்பாடல், பொருள் காண முடியாத எல்லையிலே விளங்கும் தனித்தன்மை வாய்ந்ததாகும்.

" நள்ளிரவுக் காடுகளில் பளிச்சிட்டு ஒளிவீசித் திரியும் புலியே! உன் அச்சம் நிறைந்த, செவ்வொழுங்குடன் அமைந்த உருவத்தை அமைத்த பேராற்றல் பொருந்திய கை அல்லது கண் யாருடையதோ ?" என்று அப்பாடல் துவங்குகிறது.

"எந்தத் தூரத்து ஆழ்கடலிலே அல்லது விண்மீனில், திகழ்ந்ததோ உன் கண்களில் எரிந்திடும் தீ ?"—இந்த வரிகளின் மூலம் கவிஞர் அண்டத்தின் ஆழத்திற்கும் சேய்மைக்கும் கொண்டு செல்கிறார். 'ஒரு தனியான, எரிக்கும் தன்மையுள்ள ஓருருவத்தில்' கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்படுகின்றன; எல்லையற்ற அண்டத்தின் ஆற்றல் முழுவதும் 'இந்த இரண்டு கண்களில் கண்டுபிடித்து, அழிவற்ற செயல்களையெல்லாம் ஒரு தனிச்செயலிலே காண்கிறார்' கவிஞர். ஆழ்கடலிலிருந்து—'நள்ளிரவுக் காடுகள்'—வானத்திற்குப் பறக்கின்றது கவிஞரின் கற்பனை. பிறரைக் கொன்று வாழும் உள்ளுணர்வுடைய பயங்கரமான விலங்கான புலி, நமக்குக் கோபத்தையும் ஆழ்ந்த உணர்ச்சியையும் நினைவுறுத்திப் பயிற்சி அற்ற அமைதிநிலையைக் கலைத்துவிடுகின்றது. குறியீடுகள், குறிப்புக்கள் மூலமாக வளர்ந்து செல்லும் இக்கவிதை, ஐந்தாவது பாடலின் இறுதிவரியில் பொருள் நிறைந்த ஓரண்டத்தையே தன்னுள் அடக்கியுள்ளது.

"ஆட்டுக் குட்டியை உருவாக்கிய அவரே தான் உன்னையும் படைத்தாரா ?" என்ற வினா நம்மையெல்லாம் திகைக்க வைக்கிறது.

பிளேக்கின் கோட்பாட்டை நுணுக்கமாக ஆராய்ந்த மிட்டில்டன் முர்ரே (Middleton Murray) அவர்களுடைய ஆராய்ச்சியுரையில் நுட்ப ஆராய்ச்சியுடன் பல உண்மைகளை உள்ளடக்கிய தன்மையையும் காண முடியும். அவர், பிளேக்கின் 'பயிற்சி இன்மை குறித்த கவிதை'களை "எல்லையற்ற ஒன்றை எந்தப் பொருளிலும் காணும் பிளேக்கின் ஆற்றலுடன் கலந்த ஆக்கச் சக்தியின் வேகம்" என்று கூறியுள்ளார். "புதியதொரு உலகத்தில் மீண்டும் பிறந்த ஆத்மாவின் நிலைபோலுள்ளது." உள்ளும் புறமும் உள்ள இரு வேறு உலகங்களை இங்குக் காணலாம். பிளேக்கின் கருத்துப்படி "எல்லாவற்றிலும் எல்லையற்ற தன்மையைக் காண்பவனே கடவுளைக் காண்கிறான்; மாறாக விகிதத்தன்மையை (ratio) மட்டும் காண்பவன் தன்னை மட்டுமே காண்பான். இங்கு விகிதத்தன்மை என்று குறிப்பிட்டது, மனத்துள் பொதிந்த நுண்பொருள்—ஒரு பொருளின் கருத்து அல்லது பிம்பம். இது செயல்முறை வாழ்க்கைக்குப் போதுமானதாகும். எல்லாவற்றிலும் எல்லையற்ற தன்மையைப் பார்ப்பதென்பது, 'ஒரு மணல் மணியில் உலகத்தையும், ஒரு காட்டுப் பூவில் வான உலகத்தையும்' காண்பது போன்றதாகும். பொருள்களின் ஒப்பிடமுடியாத தனித்தன்மையினால் உண்டாகும் ஆத்ம உணர்ச்சியை உணரவேண்டும்." அதாவது ஒரு பொருள் எப்படி உள்ளதோ அது உள்ளபடியே காணவேண்டும்.

உள்ளதை உள்ளபடியே காண வேண்டுமாயின் தன்னைக் கீழ்ப்படுத்திக்கொள்ள வேண்டியது தேவையாகும். பொருள்களின் அழிவற்ற தனித்தன்மையை ஒத்துக்கொள்ளும்பொழுது, 'தான்' என்ற உணர்ச்சி அற்றுப் போய்விடுகிறது. தன்னைக் கீழ்ப்படுத்திக்கொள்ளும்பொழுது அடையாளம் (identity) புரிந்துகொள்ளும் விழிப்புணர்ச்சி தோன்றுகிறது. இது அடையாளத்திற்கு அடையாளம் தரும் மறுதலிப்பாகும். "எல்லாப் பொருள்களிலும் எல்லையற்ற தன்மையைப் பார்க்க வேண்டுமாயின், எல்லையற்ற தன்மையை ஒரு மனிதன் தன்னுள்ளே நிறையப் பெற்றிருக்கவேண்டும்; அதாவது, படைக்கப்பட்ட பொருள்கள் யாவற்றிலும் கடவுளைக் காண ஒவ்வொருவரும் கடவுளாக

மாறவேண்டும். எல்லாப் பொருள்களும் கடவுளின் அடையாளங்களே, ஆனல் மனிதன் தானும் கடவுளின் அடையாளமே என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்று பிளேக் கூறியுள்ளார். இது கிட்டத்தட்ட வேதாந்தம் போல இருக்கக் காணலாம். மனிதன் தன் அடையாளத்தைப் புரிந்துகொள்வதை எது தடுக்கிறது என்பதற்கு பிளேக் தரும் காரணத்தைக் காணும்பொழுது இக் கருத்து மேலும் உறுதிப்படுகின்றது. பொய்த்தோற்றம் உடைய, அடையாளத்திற்குப் புறம்பான நுட்ப உணர்வான பொய்யுணர்வே (false reason) இதற்குரிய காரணம் என்று பிளேக் கூறியுள்ளார். இந்தப் பொய்யுணர்வே நியூட்டன், லாக் (Locke) போன்ற விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகளின் சிந்தனை உலகில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்தப் பொய்யுணர்வே விகிதம் அல்லது ஆவி உருவான உணர்வு (Spectrous Reason) என்பதாகும். இது ‘அவித்யா’ அல்லது ‘அஞ்ஞானம்’, அல்லது ‘அபரா வித்யா’ என்ற தத்துவக் கோட்பாட்டை நினைவுறுத்துவதைக் காணலாம். அடையாளம் என்ற கொட்பாட்டைப் பிளேக் தனக்கே உரிய நடையில் உருவாக்கியுள்ளார். ‘தான்’ என்ற பிணைப்பிலிருந்து விடுதலை பெற, தனித்தன்மையிலிருந்து சமுதாயத்தை நோக்கி வளர ஒருவன் செய்யும் முயற்சிக்கு பிளேக் இதைத் தொடர்புபடுத்துகிருர். ஒழுக்கக் கோட்பாடு, விஞ்ஞானக் கோட்பாடு, சிந்தனைக் கோட்பாடு முதலிய எல்லாக் கோட்பாடுகளிலிருந்து விடுதலை பெறுவது இம் முயற்சியின் ஒரு படியாகும். தன்தன்மை (Selfhood), கோட்பாடு (Law) ஆகிய இரண்டும் கட்டுப்பாடுகளாகும். பிளேக்கின் கூற்றுப்படி, மனிதன் தன்னுள் அண்டத்தை அடக்கியுள்ளான், தன்னுள் அடங்கியுள்ள அந்த அண்டத்தை விடுவிப்பதும் அவன் சக்தியிலேயே உள்ளது. மனிதனின் தன்தன்மை அழிக்கப்படும்பொழுது, சமுதாயம் விடுவிக்கப்படுகின்றது.

இந்த விடுதலையின் பாதையே அறிவுப் பாதையாகும். மனிதனின் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் அறிவு உள்ளுணர்வாகவும், உணர்ச்சிநிலையற்ற முறையில் அமைந்துள்ளது. இதுவே பயிற்சியற்ற நிலையில் உள்ள குழந்தைப் பருவமாகும். குழந்தை வளர்ந்து ‘அனுபவம்’ பெறும் பொழுது இந்த நிலை இழந்து, உணர்ச்சியுடன் கோட்பாடுகளுக்கு ஒத்தியங்கும் புதுநிலை தோன்றுகின்றது. அனுபவ நிலையில் இயற்கையான குழந்தையின் பயிற்சிஅற்ற நிலை, கோட்பாடுகள் அல்லது சட்டங்களை ஏற்றுக்கொள்ளும் உணர் நிலையான குழப்ப நிலைக்கு வழி வகுத்துவிடுகின்றது. அனுபவக் கவிதைகள் முழுவதிலும் கோட்பாட்டின் உண்மையை ஒத்துக்கொள்ளும் தன்மையும் அதன் விளைவான கட்டுப்பாட்டுணர்ச்சியும் வெளியிடக் காணலாம். கோட்பாட்டுணர்ச்சி, தன்னுணர்வால் பின்தொடரப்படுகின்றது; அடையாளம் தன்தன்மைக்கு மாற்றப்படுகின்றது. அதிர்ஷ்டவசமாக மனிதனைப் பொறுத்தவரை இதுவே இறுதிநிலை அல்ல. அடையாளத்தின் அறிவு திரும்பப் பெறப்படுகிற மூன்ருவது நிலை ஒன்று உள்ளது. ‘அனுபவம்’ என்ற நிலை உண்மையில் இருள், அறியாமை, தனிமை முதலியன நிறைந்த ஒரு நிலை என்பதில் ஐயமில்லை. ஆனல் அது மனிதன் தானே உண்டாக்கிக்கொண்ட தனிமை ஆகும்—மனிதன் தன் மனக்களத்தில் உருவாக்கிக்கொண்ட தளைகள். மெய்யுணர்வின் சிறப்பு கைப்பற்றப்படும்பொழுது, மெய்யுணர்வின் கருவான விகிதத் தன்மை அழிக்கப்படும்பொழுது, திரும்பப் பெறப்படுவதே அடையாளம்; அதாவது அழியாமை ஆகும்.

புத்தகம் எழுத விரும்புவோன் முதலில் மாணவனுக இருக்கப் பழக வேண்டும்.

—டிரைடன்.

புத்தகங்களின் பெருவாரியான விற்பனை

டி. வி. குஞ்ஞிகிருஷ்ணன்

புத்தகங்களின் விற்பனை அளவைப் பெருக்கவும், பல்வேறு இடங்களில் புத்தகங்கள் கிடைக்கும்படியாகச் செய்யவும், தென்மொழிப் புத்தக டிரஸ்ட் பெருவாரியான விற்பனையுள்ள பத்திரிகை ஒன்றின் துணையை நாடியது. முன்மாதிரித் திட்டமாகக் கேரளாவில், 'மாத்ருபூமி' தினத்தாளின் ஒத்துழைப்புடன் ஒரு சோதனை நடத்தப்பட்டது. 'மாத்ருபூமி' இதழ் நாளொன்றுக்கு 1,00,000 பிரதிகள் விற்பனையாவதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 1961ஆம் ஆண்டின் முற்பகுதியில் டிரஸ்டும் 'மாத்ருபூமி'யும் ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. இதன்படி டிரஸ்ட், ஆறு மாதங்கள் வரை ஒவ்வொரு மாதம் முதல் தேதி அன்று 12 புதிய புத்தகங்களில் ஒவ்வொன்றிலும் 1000 பிரதிகளைக் கொடுக்கவேண்டும்.

இந்தத் திட்டம் 1961 மே மாதத்தில் துவக்கப்பட்டது. டிரஸ்ட் "மாத்ருபூமி"யுடன் கலந்தாலோசித்து முந்திய மாதத்தில் வெளியிடப்பட்ட புத்தகங்களில் பன்னிரண்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தப் புத்தகங்கள், பதிப்பகத்தாரிடமிருந்து 40% கழிவுக்கு ஒப்படைப்பு முறையின்படி (Consignment basis) தருவிக்கப்பட்டன. தகுதி, மற்றும் விற்பனைக்கு உரிய தன்மை ஆகியவற்றைப் பொறுத்தும், கூடுமானவரை ரூ 2-க்கு மேற்படாத விலையுள்ளனவாகவும் இந்நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இந்தப் பன்னிரண்டு புத்தகங்களின் பிரதிகளை 'மாத்ருபூமி' தன் விற்பனையாளர்களுக்கு அனுப்பியது. இவ்விற்பனையாளர்கள் அவர்களுடைய பழைய விற்பனையைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எல்லா விற்பனையாளர்க்கும் 15% கழிவு தரப்பட்டது; தங்களுக்கு அனுப்பப்பட்ட பிரதிகளில் அரைப்பகுதி அல்லது அதற்கு மேல் விற்பவர்களுக்கு 5% அதிகக் கழிவு தரப்பட்டது. இப்புத்தகங்களை மொத்தமாக விலை கொடுத்து வாங்கும் விற்பனையாளருக்கு 25% கழிவு தரப்பட்டது.

படிப்பவர்க்கு உற்சாக மூட்டுவதற்கென ரூ. 300/- மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு புத்தகத்திலும் குறுக்கெழுத்துப் போட்டிக்குரிய கூபன் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கூபனைச் சரியான முறையில் நிரப்பி அனுப்பியவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. 'மாத்ருபூமி' ஒவ்வொரு மாதமும் பன்னிரண்டு நூல்களில் 12,000 பிரதிகளைக் கூப்பன்களுடன் விற்பனையாளருக்கு அனுப்பி வந்தது. ஒவ்வொரு புத்தகமும் முத்தரை பொறிக்கப்பட்ட பிளாஸ்டிக் பையில் வைக்கப்பட்டிருந்ததால், முத்தரையைப் பாதிக்காமல் பையைப் பிரிக்கவோ, புத்தகத்தைப் படிக்கவோ முடியாது.

பங்கீட்டு முறை

புத்தகங்களின் பெயர்களும் அவற்றைப் பற்றிய சிறு விளக்கக் குறிப்புக்களும், குறுக்கெழுத்துப் போட்டியைப் பற்றிய விவரங்களும் நன்கு விளம்பரப்படுத்தப்பட்டன. 50,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு விற்பனையாளரின் மூலமாக வாசகர்களிடையே பரப்பப்பட்டன.

1961 ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாளுடன் இந்த ஆறுமாத கால வரையறை முடிந்தது. இக்காலத்தில் 74 புத்தகங்களில் 72,000 பிரதிகள் பங்கிடப்பட்டன (distributed). சிலவற்றில் 1000 க்குக் குறைவான பிரதிகள் பங்கிடப்பட்டன. இந்த 74 புத்த

கங்களில் 26 புதினங்கள், 10 நாடகங்கள், 10 குழந்தை நூல்கள், 7 சிறுகதைத் தொகுப்புக்கள், 6 கவிதைத் தொகுப்புக்கள், 5 கலை நூல்கள் (பொருளாதாரம், ஆட்சியியல்), 3 விஞ்ஞான நூல்கள், 3 வாழ்க்கை வரலாறுகள், 2 நுண்கலை நூல்கள், 2 வரலாற்று நூல்கள் ஆகும்.

இவற்றில் அரைப்பகுதியாகிய புதினங்கள், சிறுகதைகள் மிகச் சிறந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்டவை ஆகும்; இவற்றில் ஒன்று கூட துப்பறியும் கதை அல்ல. இந்த விற்பனையில் பெருவாரியாக விற்கப்பட்டவை கதைகளன்று; மாறாகப் பொருளாதாரம், சமூக அறிவியல் (Social science), கவிதை முதலியன பெருவாரியாக விற்பனை ஆயின. இந்தத் திட்டத்திலிருந்து துப்பறியும் கதைகள், கதைகள் முதலியன மட்டுமல்லாமல் கருத்துக்கள் பொதிந்த நூல்களும் பெருவாரியாக விற்பனை ஆகும் என்பது தெளிவாயிற்று.

விற்பனை அறிக்கை

இந்தத் திட்டத்தின்படி ஆறு மாதங்களில் 74 புத்தகங்களில் 31,259 பிரதிகள் விற்கப்பட்டன; அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 49,188. 95 காசு ஆகும்.

புத்தகங்கள் மிகப் பரவலான இடங்களுக்கும் செல்கின்றன, மற்றும் கிராமப்புறங்களுக்கும் செல்கின்றன என்பவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். உண்மையில், இந்தத் திட்டத்தின்படி நடைபெற்ற விற்பனை இதற்கு முன்னர் இருந்து வரும் வேறு எந்த விற்பனை முறையிலும் நடைபெற்றிருக்காது. கிராமங்களுக்கு, குறிப்பாக வீட்டு வாயிலுக்கே புத்தகத்தைக் கொணர்ந்து தரும் பொறுப்பை இத்திட்டம் ஏற்றுக்கொண்டது.

புத்தகப் பங்கீட்டில் சலிப்பைத்தரும் ஒரு பிரச்சினை, புத்தகங்களை வாங்குபவர்க்கு அனுப்பிவைப்பதே ஆகும். அஞ்சல் மூலம் புத்தகங்களை நெடுந்தொலைவு அனுப்பிவைப்பது பெருஞ் செலவுக்குரிய தாகும்; வாசகர்கள் சில சமயங்களில் புத்தகத்தின் விலையில் அரைப்பகுதி அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை அஞ்சல் கட்டணமாகத் தரவேண்டியுள்ளது. ஆனால், இந்தப் பெருவாரி விற்பனைத் திட்டத்தின்படி, புத்தகப் பங்கீட்டாளரின் விற்பனையாளர்களால் வாசகர்களின் வீட்டு வாயிலிலேயே கொண்டுபோய் தரப்படுகின்றன. இதன் காரணமாகப் பலரும் புத்தகங்களை வாங்க வழி தோன்றியுள்ளது.

பயன்கள்

புத்தகங்களை அதிகமாக விற்கவேண்டுமெனில் சிறிய கிராமங்களிலும் கடைகளைத் திறக்கவேண்டும், ஆனால் ஒவ்வொரு கிராமமும் ஒரு புத்தகக் கடையை இயக்க முடியுமா என்பது ஐயத்திற்கிடமானதே. எனவே, கிராம வாசிகள் புத்தகங்களை வாங்குவதற்குரிய ஒரு நல்லவழி அவர்கள் நகரங்களுக்கு வரும்பொழுது அவர்களுக்குப் பிடித்தமான புத்தகங்களை வாங்கிக் கொள்வதுதான். இருப்பினும், பத்திரிகைகளும், நாளிதழ்களும் ஒவ்வொரு கிராமத்துக்கும் செல்கின்றன. பத்திரிகைகள் விநியோகிக்கப்படும் துறை அறிந்து அதைப் பயன்படுத்தினால், கிராமங்களில் தனிப்பட புத்தகக் கடைகள் அமைக்கவேண்டிய தேவையே இராது. அதிகப்படி செலவில்லாமல் புத்தகங்களைப் படித்துப் பயன்பெறுவது கிராமவாசிகளுக்கு எவ்வளவு முக்கியமானது என்பது அடுத்துள்ள கடிதத்தின் பகுதியிலிருந்து தெளிவாகும். "கிராமத்தில் வாழ்கின்ற எம்போன்றார்க்குப் புத்தகங்களைப் பெறுவது மிகக் கடினமாகும். நகரங்களுக்குச் செல்லும் பொழுது கிடைக்கும் புத்தகங்களைப் படிப்பதால் எங்கள் புத்தக ஆர்வத்தைத் தணித்து வந்தோம். ஆனால், இது எப்பொழுதும் எல்லார்க்கும் சாத்யமானதல்ல. எம்போன்றார்க்கு உங்கள் திட்டம் ஒரு வரப்பிரசாதம் போன்றது" என்று ஒரு பஞ்சாயத்து சபை அங்கத்தினர் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, புத்தகங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும். உதாரணமாக, ஒரு புகழ்பெற்ற வெளியீட்டாளர், தம்

புத்தகத்தை இத்திட்டத்தில் சேர்ப்பதாக இருப்பின் விலையைக் குறைத்துக் குறிப்ப தாகக் கூறினர். இதிலிருந்து, உடனடி யாக விற்பனை நடைபெறுமாயின் வெளியீட் டாளர் புத்தகங்களின் விலைகளைக் குறைக்கத் தயங்குவதில்லை என்பது நன்கு விளங்கும். உண்மையில், விலையை அதிக மாகக் குறித்து நெடுங்காலம் விற்பனைக்காகக் காத்திருப்பதைவிட, குறைவாகக் குறித்து விரைவில் விற்பதையே வெளியீட்டாளர் விரும்புகின்றனர் என்பதும் தெளிவாகிறது. எழுத்தாளருக்கும் இது பிடித்தமானதே என்பதில் ஐயமில்லை.

மற்றுமொரு பயன் என்னவெனில், குறுக்கெழுத்துப் போட்டி யொன்றும் இத்துடன் பிணைக்கப்பட்டிருப்பதால், பெரு வாரியான மக்கள் புத்தகங்களை வாங்கிப் பயன்பெறுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். இவர்களில் சிலர் பரிசுகள் பெறுவதற்கென்றே அந்நூல்களை வாங்கலாம். அவர்கள் எதற்காக வாங்கி இருப்பினும், ஒருமுறை வாங்கிய பிறகு புத்தகத்தைப் படிக்கத்தான் செய்கின்றனர். எனவே, இத்திட்டத்தின் முக்கியமான பயன், புத்தகங்களைப் பரவலாகப் பரப்பி, பல்வேறுபட்ட மக்களிடையே படிக்கும் பழக்கத்தை உண்டாக்கி வளர்த்து, நிலையானதாக மாற்றியது என்பதே ஆகும்.

இத்திட்டத்தின்படி, தகுதியுள்ள எழுத் தாளர்களை ஊக்குவித்து மொழியை வளம் பெறச் செய்ய இயலும். "இத்திட்டத்தை உருவாக்கியதன் மூலமாக மொழியின் முன்னேற்றத்திற்கு நீங்கள் ஆற்றும் பணியை நான் பாராட்டுகின்றேன்" என்று ஒரு வாசகர் தம் கடிதத்தில் குறிப் பிட்டமை இங்கு நோக்கத் தக்கது.

இவை யாவற்றினும் குறிப்பிடத்தக்கது, வெளியீட்டுத் துறைக்கே இத்திட்டம் நல்ல ஊக்கத்தைக் கொடுத்துள்ளது என்பதாகும். இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற பல வெளியீட்டாளரும் முன்வந்துள்ளனர். எல்லா முக்கிய வெளியீட்டாளரும் இதன்படி 40% கழிவு தந்துள்ளனர். இவற்றாலும், மற்றும் சில காரணங்களாலும், பத்திரிகை விற்பனையாளர் வாயிலாக நிறைவேற்றப்படும் இந்தப் பெருவாரித் திட்டத்திற்கு நல்லதொரு எதிர்காலம் உள்ளது என்பது தெளிவாகும்.

இதிலும் ஒரு சிறு இடையூறு உள்ளது. விற்பனையாளரிடமிருந்து ஒவ்வொரு மாதமும் பணத்தை வசூலித்து, கணக்கினைச் சரியாக வைத்துக்கொள்வது சற்றுக் கடினமான பிரச்சினை ஆகும். மேலும், விற்கப்படாத பிரதிகளைத் திரும்பப்பெற்று வெளியீட்டாளருக்குத் திருப்பிச் சேர்ப்பிப் பதும் முக்கியமாகும். அப்பொழுதுதான் வெளியீட்டாளருக்கு இடையூறு ஏதும் இல்லாமற் போவதுடன், இத்திட்டத்தில் நம்பிக்கையும் ஏற்படும். சற்றுச் சிரமம் பார்க்காமல் உழைத்தால் இந்தக் குறை களும் நீங்கிவிடும்.

எனவே, புத்தகங்களின் பெருவாரியான விற்பனை என்ற சலிப்பைத்தரும் பிரச் சினையைத் தீர்க்க பத்திரிகை விற்பனையாளர் வாயிலாக நடத்தும் விற்பனை சரியானதொரு வழி என்றால் அது மிகையாகாது.

நன்றாக எழுத வேண்டுமென்றால் நன்றாகச் சிந்திக்க வேண்டும், நன்றாக உணர வேண்டும், நன்றாக வெளிப்படுத்த வேண்டும்—அதாவது, ஒரே சமயத்தில் அறிவுக் கூர்மை, உள்ளம், சுவையுணர்வு அனைத்தும் ஒருங்கே இயைய வேண்டும்.

—பஃபன்

அமைதிக்கு வழி

திரு. தி. மாணிக்கவாசகம் செட்டியார், பி.ஏ.

இன்றைய உலகின் மக்கள் தொகை ஏறக் குறைய முன்னூறு கோடியாகும். இம்மக்கள் அமெரிக்கர், ஐரோப்பியர், ஆப்ரிக்கர், ஆசியர், ஆஸ்திரேலியர் என்று அவரவர்கள் வாழும் இடவகையால் வெவ்வேருக அழைக்கப்படுகின்றனர். அன்றியும், ஆங்கிலேயர், சப்பானியர், சீனர், தமிழர் என்று மொழி வகையால் மக்கள் மேலும் வேறுபட்டு வாழ்கின்றனர். இனி கிறித்தவர், புத்தர், சமணர், முகமதியர் என்று மதங்களின் அடிப் படையில் பிரிவுண்டும் நிற்கின்றனர். சாதி வகையாலும், இனவகையாலும் இவ்வுலகில் காணப்படும் வேறுபாடுகளும், மாறுபாடுகளும் கணக்கில் அடங்கா. இவ்வாருக இன்றைய உலகம் இடம், மொழி, இனம், மதம், சாதி முதலிய பல்வேறு அமைப்புக் களால் பிரிந்தும், மனம் திரிந்தும் வாழும் காட்சியையே நமக்கு அளித்துள்ளது. இவ் வமைப்புக்கள் எல்லாம் மக்களை மக்களாக ஒன்றுபட்டு வாழும் இனிய சூழ்நிலையை உண்டாக்குவதற்கு மாருக நாளும் பூசலும், போரும் தோன்றுமாறு செய்து மனித இனத்தையே மாசுபடுத்தும் அவல நிலையை உண்டாக்கி வருகின்றன.

இத்தகைய அஞ்சத்தக்க சூழ்நிலையில் தான் உலகப் பேரமைப்பாகிய ஐக்கிய நாடுகள் சபை நம்பிக்கை ஒளியை வளர்த்து வருகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் நல் வினைப் பயனுக வாழும் சான்ருேர்கள் சிலர் இவ்வேறுபாடுகளைக் களைந்து மன ஒருமைப் பாட்டையும் உயர்ந்த பண்பாட்டையும் வளர்த்துப் போரையும், பூசலையும் தவிர்க்க முற்பட்டு நிற்கின்றனர். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகுக்கு இத்தகைய நம்பிக்கை ஒளியைப் பரப்பின சான்ருேர் ஒருவர் தமிழகத்தில் வாழ்ந்தார். அவர் உலகுக்கு விடுத்த சமாதானச் செய்தியும், உலகத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் போதித்த அறிவுரையும் இன்றைய உலகிலும் மக்களாலும் தலைவர்களாலும் போற்றப்படும் தன்மையில் அமைந்துள்ளன. அச்சான்ருேர் கணியன் பூங்குன்றனுர் எனப்படுவார். அவர் இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மகிபாலன் பட்டியில் தோன்றியவர். இப் பகுதி அன்று பூங்குன்றம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது என்பது கல்வெட்டுக்களால் தெரியவருகிறது.

“தன் வீடு, தன் பெண்டு, தன் பிள்ளை” என்று கூறித்திரியும் கடுகு உள்ளம் படைத்தவர்களும், “தன் ஊர், தன் நாடு, தன் இனம்” என்று முழங்கி வரும் கடுகுக்கும் மூத்த துவரை உள்ளம் படைத்தவர்களும் பெருகி வாழும் இன்றைய உலகுக்குக் கணியன் பூங்குன்றனுர் விடுக்கும் அறைகூவல் வியப்பாக இருக்கலாம். ஆனல் அது இன்று மிகவும் வேண்டப்படுவதும், பின்பற்றத்தக்கதும் ஆகும் என்பதில் ஐயமில்லை. இன்றைய உலகம் அழியாமல் உயிர்வாழ வேண்டுமானல் அப்பெருமகனுர் கூறிய அறிவுரையை மனங்கொண்டு செயல்படுவதே சிறந்தவழி.

அவர் அருளுகிருர்: “எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்; நன்மையும் தீமையும் தாமே வரும்; பிறரால் தரப்படுவன அல்ல; இன்பமும் துன்பமும் நன்மை தீமைகளைப் போலத் தாமே உண்டாவன. சாதல் புதுமையானது அன்று; அது பிறந்த அன்றே அமைந்த ஒன்று; வாழ்க்கை மிகவும் இனிமையானது என்று கருதி அளவு கடந்து மகிழ்ந்தோம் இல்லை; ஒரு வெறுப்பு உண்டானபோது, வாழ்க்கை கசப்பானது என்று கருதித் தற்கொலை செய்து கொள்

வோம் அல்லோம்; பெரிய ஆற்றில் ஓடி வரும் நீரின் மிகையால் மிதந்து செல்லும் ஓடத்தைப்போல அருமையான உயிர் ஊழின் வழியே செல்லுவதாகும்; இது தெளிவு, உறுதியானது; ஆதலால், யாம் சிலரைப் பெரியோர் என்று கருதி 'வாழ்க' என முழங்குவதும் இல்லை; சிலரைச் சிறி யோர் எனக் கருதி 'வீழ்க' என அவமதிப் பது அதனினும் இலம்" இவ்வாறு கூறி னர் கணியன் பூங்குன்றனர்.

இருபதாம் நூற்றுண்டின் இடைக்காலத் தில் வாழ்கிறோம் நாம். ஒரு காலத்தில் ஊர்ப்பற்று சிறந்ததாக இருந்தது. அது பின்னர் மாநிலப் பற்றுக மாறியது. அது நாளடைவில் நாட்டுப்பற்றுக வளர்ந்து சிறந் தது. இப்போது நாட்டுப்பற்றும், அனைத்து நாட்டுப்பற்றுக மாற வேண்டும். அப்போது தான் மக்கள் இனம் அமைதியாக வாழமுடி யும் என்று உலகின் தலைசிறந்த சிந்தனை யாளர்களும் அரசியல் மேதைகளும் கூறி வருகின்றனர். இவ்வாறு ஊர்ப்பற்று (Regionalism), மாநிலப்பற்று (Statism), நாட் டுப்பற்று (Nationalism) ஆகியவை விஞ்ஞா னம் வளர வளர உலகப்பற்றுக (Internatio- nalism) மாறிவிட்டது. ஆனல் இப்பின்ன ணியை வைத்துக் கொண்டு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு தமிழர் "எல் லாம் என் ஊர்" (The whole world is my motherland) என்றும் "எல்லோரும் என் சுற்றத்தார்" (Mankind is my kith and kin) என்றும் கூறியிருப்பது பெரும் வியப்பையும் பாராட்டையும் விளைவிக்கிறது.

மேலும், "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்றும் "நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன" என்றும் அச்சான்றோர் அருளி யது தனிப்பட்டவர்களுக்கு மட்டும் அன்றி உலகின் பல்வேறு அரசுகளுக்கும் பொருந்து வது ஆகும். ஒரு தனி மனிதனுக்கு வரும் தீமையும் நன்மையும் அவன் செய்யும் தீய செயலையும் நல்ல செயலையும் பொறுத்தவை. அதுபோலவே, ஓர் அரசோ, ஒரு நாடோ தான் அடையும் புகழுக்கும் இகழுக்கும் பிற நாட்டைக் குறை கூறுவது ஒரு சிறிதும் பொருந்தாது. ஒரு நாட்டவர், பிற நாட்ட வரை அடக்கி அடிமைப்படுத்தி வாழ்வது அரசியல் முறையில் தீய செயலாகும். அத ஞல் அவ்வல்லரசு அடைவது இகழ்ச்சியே ஆகும்; அதன் செயலாலேயே அதற்குத் துன்பமும் மனக்கவலையும் இழிவும் உலகில் ஏற்படுகின்றன. அதற்குப் பிற நாடுகளைக் குறை கூறுவது பொருந்தாது. இப்பாடலை அருளிய கணியன் பூங்குன்றனர் ஒரு சிறந்த சிந்தனைச் சிற்பி. உலகியலை முற்றிலும் உணர்ந்தவர். மக்களின் உள்ளங்களை எல்லாம் வள்ளுவரே போல ஓர்ந்து உணர்ந் தவர். எனவேதான் அவர் கூறும் செயல் கள் எல்லாம் வாழ்க்கையின் அசைக்க முடி யாத அடிப்படை உண்மைகளாக மிளிர்வ தோடு காரண காரியத் தொடர்பும் கொண்டு விளங்குகின்றன. ஒரு மனிதன் தன்னைப் போன்ற பிறன் ஒருவனுக்கு நன்மை செய்ய நினைப்பது அருமை. இது உலகியல். நினைப் பதிலும் செய்வது மிகவும் அருமையானது. ஆனல் தீமை செய்ய உடனே முன்னிற் கிறுன். எளிதாகவும் செய்துவிட முடிகிறது. இது போன்றதுதான் உலக அரசியலும். இன்றைய உலகில் ஒரு நாடு மற்றெரு நாட் டுக்கு உதவியும் நன்மையும் செய்வதற்கு எளிதில் முன் வருவதில்லை. அழுக்காறும் பொறாமையும் இதற்குக் காரணங்கள். பிறி தொரு நாட்டிற்கு உதவி செய்தால், அந்த நாடு அவ்வுதவியைப் பெற்று வளர்ந்து தன் னினும் பெரிய வலிமை மிக்க வல்லரசாக வந்துவிடுமோ என்ற அச்சமும், தீய எண் ணமும் இன்றைய அரசியல் வானிலே சூழ்ந் துள்ளன. எனவேதான் சில வல்லரசுகள் பிற்பட்ட நாடுகளுக்கு நேரடியாகத் தீமை புரியாவிட்டாலும், மறைமுகமாகப் பின்ன ணியில் நின்றுகொண்டு பிற நாடுகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன. அதனல்தான் காங்கோவிலும் இந்தோனேசி யாவிலும் இன்ன பிற இடங்களிலும் நிலை யான அமைதி ஏற்பட முடியவில்லை. இக் காட்சியை அரசியல் அறிவு படைத்த எல் லாரும் உணர்ந்து வருகின்றனர். இவ்வாறு தனிப்பட்ட முறையிலும், அதனினும் விரிந்த உலக அரசியல் அரங்கிலும் தீமை புரி

வதையே நோக்கமாகக் கொண்ட சக்திகள் ஒவ்வொரு காலத்திலும் தோன்றி வலுப்பெறு கின்றன. இத்தகைய சூழ்நிலையை நன்கு அறிந்த கணியன் பூங்குன்றனர் முதலில் தீமையை அகற்றவேண்டும் என்று கூறி வற்புறுத்துவாராயினர். தீமை அகன்று விடுமானல் அந்த இடத்தில் நன்மை வந்து குடிபுகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். மேலும் ஒருவன் தீமை புரிவதில்லை என்ற மிகப்பெரிய அறத்தை மேற்கொண்டு வெற்றி பெற்றுவிடுவானனுல், அவனுல் நன்மையை மிக எளிதில் செய்துவிடமுடியும்.

இனி, "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற எண்ணம் மக்கள் மனத்தில் நன்கு ஊன்றி வளரவேண்டும். இவ்வெண்ணம் நிலைபெற்றுவிடுமானல், "நோதலும் தணித லும் அவற்றோரன்ன" என்பது தானே அமையும். தனக்கு வருகின்ற துன்பத்திற் குப் பக்கத்தில் வாழும் மக்களைக் காரண மாக்குவது ஒரு சிறிதும் பொருந்தாது. இவ் விரிந்த மனப்பான்மை சமுதாயத்தில் வளர்ந்துவிட்டால், மனக் கசப்பும், பூசலும் போரும் ஏற்பட வழியே இல்லாமற்போகும். "உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்கு உரு" என்ற வள்ளுவர் வாய்மொழியை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நிலை தனிப்பட்டவர்களிட மும் அரசாங்கங்களிடையேயும் பரவுமானல் நல்ல அமைதியான சூழ்நிலை தானே அமைந்துவிடும்.

இனிப் பூங்குன்றனர் "சாதலும் புதுவது அன்றே" என்று முழங்கியுள்ளார். கரு வில் தோன்றிய நாள் முதலே இறப்பும் தோன்றியுள்ளது. பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருவனவாம். இதில் புதுமையும் வியப்பும் இல்லை. இங்ஙனம் இவர் கூறுவா னேன்? உலகில் மக்கள் சாதலைக் கண்டு அஞ்சி நடுங்கி அவலப்பட்டு நிற்கின்றனர், நெஞ்சழிகின்றனர். இத்தகைய கோழை களால் இவ்வுலகில் எத்தகைய சீரிய செய லும் செய்ய முடியாது. இப்படிப்பட்டவர் கள் உலகினுக்கே ஒரு பெரிய பளுவாக அமைந்துவிடுகிருர்கள். மனிதன் அச்சத் தால் பீடிக்கப்படுவானேயானல், அவன் எந் தச் சாதனையையும் மேற்கொள்ளமுடியாது. வீரன் ஒரு தடவையே சாகிறன்; ஆனல் கோழை பல தடவை சாகிறன். (The brave taste death but once; the coward dies many a time.)

வரலாற்றை உருவாக்கிய மாவீரர்களும் சான்றோர்களும் இறப்பதற்கு அஞ்சி அமைந் தவர்கள் அல்லர். புகழ் வருவதாயிருந்தால் உயிரையும் கொடுத்து அதனைத் தேடிக் கொள்வதில் முனைந்து நிற்பர் சான்றோர். "புகழெனின் உயிரும் கொடுக்குவர்" என்ற பொன்னுரை மனங்கொள்ளத் தக்கது. பாரதி யாரும் "அஞ்சி அஞ்சிச் சாவார் இவர் அஞ் சாத பொருளில்லை அவனியிலே" என்று கூறியுள்ளார். எனவே மக்கட் சமுதாயத் தில் விழிப்பையும் வீரத்தையும் உண்டாக்க நினைத்த கணியன் பூங்குன்றனர் இவ்வாறு சாதலைச் சாடுவாராயினர். "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" என்பது வள்ளுவர் வாய்மொழி அன்றோ? எனவே தமிழர் சமு தாயத்தைத் தட்டி எழுப்பி அரிய பெரிய காரியங்களில் ஊக்கமுடன் ஈடுபட்டு நாட் டிற்கும் மக்களுக்கும் நன்மதிப்பையும் பொரு ளையும் ஈட்டித் தருதலில் மக்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று அறைகூவி அழைப்பது போன்று அமைந்துள்ளது இத் தொடர்.

அடுத்து "வாழ்தல் இனிதென மகிழ்ந்தன் றும் இலமே முனிவின் இன்னதென்றும் இலமே" என்று அருளுகிறர். இவ்வுல கத்தில் வசதிகளும் வாய்ப்புக்களும் நிரம் பப் பெற்றிருக்கும் காலத்தில் வாழ்க்கை மிக வும் இனிமையாக உள்ளது என்று பிதற்று வதும், ஏதாவது ஒரு வெறுப்போ, ஏமாற் றமோ ஏற்படும்போது இது என்ன வாழ்க்கை எனப் புலம்புவதும் மனிதனுக்கு அழகல்ல. நல்ல அறிவும் நெஞ்சு உரமும் நேர்மைத் திறமும் படைத்த பெரியோர்கள் வாழ்விலும் தாழ்விலும் ஒரே நிலையில் இருப்பார்கள். எதிர்பாராத வகையில் தனக்கு ஒரு நன்மை ஏற்படும்போது அது தன்னல்தான் வந்தது

என்று இறுமாந்து தலைகால் தெரியாமல் ஊரார்க்கெல்லாம் பறை சாற்றித் திரிவதும், ஏதாவது ஒரு தீமை ஏற்பட்டால் வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு யாருக்கும் தெரியாமல் மறைவான இடத்தில் தற்கொலை செய்து கொள்வதுமாகிய செயல்கள் அனுபவமில்லாதவர் மேற்கொள்ளக்கூடியவைகளாகும்.

இன்பத்திலும் துன்பத்திலும் சிறிதும் மனம் தளராமல் இருக்கும் உயரிய பண்பினை ஒருவன் அடைய வேண்டுமானால், அவன் நன்மை ஏற்பட்டபொழுது அளவுக்கு மீறி மகிழ்கிற பழக்கத்தைக் கைவிடுதல் வேண்டும். இதில் ஒருவன் வெற்றி பெற்று விடுவானானால் வெறுப்பும் ஏமாற்றங்களும் வாழ்க்கையில் மிகவும் சாதாரண நிகழ்ச்சிகள் என்று நினைத்து மனத்தளர்ச்சி அடையமாட்டான். இத்தகைய உறுதியான உள்ளப் பண்பு படைத்த மக்கள் ஒரு நாட்டில் மிகுதியும் வாழவேண்டும் என்ற பேரவாவினாலேயே அப்பெரியார் இப்பொருளுரையை அருளியுள்ளார் என்று கொள்ளவேண்டும்.

மனிதன் பல ஆற்றல்கள் பெற்றவன். அவன் நினைத்தால் மலை மண்ணாகும்; மண் மலையாகும். இயற்கையை வெல்லும் அளவுக்குப் பேராற்றல் பெற்றவன் மனிதன். என்றாலும் சில வேலைகளில் அவனையும் அறியாமல் அவனது ஆற்றல் தடைப்பட்டுப் போகிறது. மனிதனுக்கும் அப்பாற்பட்ட ஆற்றல் ஒன்று உள்ளது என்பதை அவன் உணர்கிறான். அவ்வாற்றலை இறைவன் என்றும் விதி என்றும் பலவாறாக அழைக்கின்றனர். மனித வாழ்க்கை ஓர் ஊழ்வழிப்பட்டது என்பது பூங்குன்றனார் கருத்து. அதற்காக அவர் மக்கள் செயலற்று இருக்க வேண்டும் என்று கூறவில்லை. எதிர்பார்த்தது நடைபெறவில்லையானால் மனிதன் பொதுவாக மனம் ஒடிந்து போகிறான். இவ்வாறு தோல்வியும் ஏமாற்றமும் ஏற்படும்போது மனிதன் அழிந்து போகாமல், தனக்கும் மேற்பட்ட ஆற்றல் ஒன்று நம்மை நடத்தி வருகிறது என்று நம்பி ஆறுதல் கொள்ள வேண்டும். இதுதான் இப்புலவர் பெருமானது உள்ளக் கிடக்கை. இதனை உணராத சில அறிஞர் பூங்குன்றனாரைத் தாக்க முற்படுகின்றனர்.

இடியும் மின்னலும் கொண்டு மேகம் மழையைப் பொழிகிறது. அம்மழைநீர் மலையிலிருந்து வெள்ளமாகக் கீழே விழுந்து ஓடுகிறது. அவ்வாறு ஓடிவரும் நீர்ப்பெருக்கோடு கூடிய ஆற்றின் போக்கிலே செல்லும் ஓடத்தைப்போன்று வாழ்க்கையாகிய படகும் ஊழ் என்ற ஆற்றோட்டத்தின் போக்கிலே செல்வது ஆகும். ஓடும் தண்ணீரை எதிர்த்துப் படகு திரும்புமானால் படகுக்குத்தான் ஆபத்து. ஆற்றின் போக்கிலே சென்றுதான் கரைசேர முயலவேண்டும். அப்படியில்லாமல், எதிர்த்து நீந்திக் கரையேறலாம் என்று நினைப்பது அறிவுடைமையாகாது. இதைத்தான் இப்புலவர்,

> "நீர் வழிப்படும் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம்"

என்று அருளியுள்ளார்.

கணியன் பூங்குன்றனார் மணிக்கால் மஞ்சத்தில் மலர்ப்படுக்கை விரித்தது போல, இதுகாறும் வெளிப்படுத்திய பொன்மொழிகளுக்கு அரணாக விளங்கும் மற்றொரு உயர்ந்த கருத்தினைக் கூறியுள்ளார். இவ்வுலகில் வாழும் மக்கள் யாவரும் இருபெரும் பிரிவுகளில் அடங்குவர். ஒரு சாரார் பெரியோர் என்று அழைக்கப்படுகின்றனர். மற்றொரு சாரார் சிறியர் என இகழப்படுகின்றனர். பெரியராவதும், சிறியராவதும் அவரவர் செயல் வேறுபாடுகளில் அமைந்துள்ளது. எண்ணம், சொல், செயல்கள் சிறப்பாக அமைந்தவர்கள் பெரியோர்கள்; அவற்றில் தாழ்ந்தவர்கள் சிறியோர்கள். ஆனால் கணியனார் உலக மக்களுக்கு ஓர் அருமையான வேண்டுகோள் விடுத்துள்ளார். சிலர் பெரியர் என்ற காரணத்தால், அவர்களை "வாழ்க" என வாழ்த்துவதும், சிறியராகிய சிலரை "வீழ்க" அல்லது "ஒழிக" என வீழ்த்துவதும் ஆகிய இரண்டும் நிற்க வேண்டும் என்கிறார் அவர். இவர் இவ்வாறு கூறக் காரணம் யாது?

மனிதனது நா இருபுறமும் வளையும் தன்மையது. வாழ்த்தப் பழகிய நா பிறரை வீழ்த்தவும் முற்படுகிறது. இன்றைய அரசியல் உலகில் இக்காட்சியைப் பார்க்கிறோம். பல கட்சிகள் அரசியல் அரங்கில் காட்சியளிக்கின்றன. அவற்றைப் பின்பற்றும் தொண்டர்களும் பொதுமக்களும் தத்தம் தலைவர்களையும் கட்சிகளையும் விண்ணதிர ஒலித்து வாழ்த்துகின்றனர். பிற தலைவர்களையும், கட்சிகளையும் "ஒழிக" என்று முழங்குகின்றனர். இது மக்கள் சமுதாயத்தில் முன்னரே நிலவி வரும் வேறுபாடுகளையும், மனக்கசப்பையும் பெரிதுபடுத்துமே அல்லாமல் சமுதாய ஒற்றுமைக்கு வழிகோலாது. ஆகையினால், வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் கொண்ட மக்களையும் தலைவர்களையும் மதித்து நேரிய வழியில் வாழ வேண்டுமானால், "வாழ்க", "வீழ்க" ஒலிகள் முற்றிலும் மறையவேண்டும். இவ்வுயரிய கருத்தையே.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

என்ற புறநானூற்று அடிகள் வெளிப்படுத்துகின்றன.

வளர்க தூய்மை!

PUTHAGA NANBAN

Statement about ownership and other particulars about *Puthaga Nanban* (according to Form IV, Rule 8, circulated by the Registrar of Newspapers for India).

1.	Place of Publication	.. Madras.
2.	Periodicity of its Publication	.. Quarterly.
3.	Printer's Name	.. Sri T. V. Venkatraman.
	Nationality	.. Indian.
	Address	.. Director, The Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18.
4.	Publisher's Name	.. V. Sundararaj Naidu.
	Nationality	.. Indian.
	Address	.. General Manager, Southern Languages Book Trust, 25, Sterling Road, Nungambakkam, Madras-34.
5.	Editor's Name	.. V. Sundararaj Naidu,
	Nationality	.. Indian.
	Address	.. General Manager, Southern Languages Book Trust, 25, Sterling Road, Nungambakkam, Madras-34.
6.	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	.. Southern Languages Book Trust, 25, Sterling Road, Nungambakkam, Madras-34.

I, V. Sundararaj Naidu, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 12-2-1962.

(Sd.) V. SUNDARARAJ NAIDU.
Signature of Publisher,

மழையில் நனைகின்ற மனிதன்

தெலுங்குமூலம்:
மஞ்சு ஸ்ரீ

தமிழ் மொழி பெயர்ப்பு:
சீதா தேவி

தவறான ஆசைகளைத் தாண்டி அக்கரையில் சேர்ந்துவிட்ட மனிதன் அவன்; இளமையிலேயே வாழ்க்கையின் பாசங்களை ஒதுக்கிவிட்டவன்; அம்மாவின் நினைவு வந்தாலொழிய ஒருபோதும் கண்ணீர் விடாதவன்; சிவப்பு நிறம் பூசிய தபால் பெட்டிகள் தென்பட்டால் நடுங்குவான். அவன் தெருவோடு நடந்து போனான். துடைத்துவிட்ட கண்ணாடி போன்ற சூரியன் காணப்படவில்லை; மழை வரும்போல் இருந்தது. மழை யென்றாலே அவனுக்குப் பயம். அவன் நோய்வாய்ப்பட்ட போதெல்லாம், 'மழையில் அலையக்கூடாது. அதாவது, நனையக் கூடாது' என்று மருந்து கொடுப்பவர்கள் சொல்லுவார்கள்.

எப்பொழுதோ, குழந்தைப் பருவத்தில் அவனை நாய் கடித்துவிட்டது. யாரோ, 'அது வெறிபிடித்த நாய்' என்றார்கள். அம்மா அவனைக் கட்டிக்கொண்டு அழுது தீர்த்தாள்.

குழந்தையாய் இருக்கும்போது, மழை வரும் அறிகுறியைக் கண்டால் அம்மா அவனைக் கயிற்றால் கட்டிப்போட்டுவிடுவாள். வேர்க்கடலை தின்னவிடமாட்டாள். நாய்க் கடிபட்டவர்கள் மழையில் நனையக் கூடாதாம், கடலை தின்னக் கூடாதாம்.

பெரியவனாய் வளரும்போது பல மனிதர்கள் அவனைக் கடித்தார்கள்.

தேர்வில் தவறிவிட்டான். அதற்காக ஒரு போதும் அழவில்லை.

அம்மா அழுதாள். அரைக்காசுக்கு உதவாதவர்களிலிருந்து மிகமிகப் பெரியவர்கள் வரையில், அவனை ஒன்றுக்கும் உதவாத மூட சிகாமணி என்று திட்டினார்கள். அவன் யாரிடமும் 'இல்லை' யென்று அதை மறுக்கவில்லை; சிலர் முன்னிலையில் 'ஆம்' என்றும் ஒப்புக்கொண்டான்.

சிறு வயதில் எப்பொழுதாவது, வகுப்பில் இருக்கும்போது பாடம் சொல்லித்தரும் ஆசிரியர்களின் நடையுடை பாவனைகளைச் சித்திரம் வரைவான். அதற்காக அடியும் பட்டிருக்கிறான்.

கல்லூரியில் நுழைந்த பின், பாடம் நடக்கும்போது மடியில் நாவலை வைத்துக் கொண்டு குனிந்த வண்ணம் படிப்பான்.

அப்புறம் கதைகள் எழுதினான். அம்மாவைப்பற்றியும் எழுதினான். அம்மா ஒரு முறை, "மாமா வீட்டுக்கு ஒரு நடை போய் வா. சகுந்தலா உன்னைப் பார்க்க வேண்டும் என்கிறாளாம்" என்று சொன்னாள். அவன் உண்மை யென்றெண்ணிக் கொண்டு, மாமாவீன் வீட்டுக்குப் போனான். சகுந்தலா தேர்வுகள் எல்லாவற்றிலும் தேறியிருந்தாள். மிக அழகாக இருந்தாள்.

ஒரு வாரம் வரையில் தங்கி, அடுத்தநாள் ஊர் திரும்ப நினைத்திருந்தபோது, இரவு வெண்ணிலா வந்தது. நிலவில் மரங்கள் அழகாய் இருந்தன. நிலவும் அப்படியே.

தோட்டத்தில் சுவரோரமாக அந்தி மந்தாரைச் செடிகள் ஐந்தாறு இருந்தன. எல்லாச் செடிகளிலும் ஒவ்வொரு பூவே இருப்பதைக் கண்டான்.

"அதை ஏன் பறிக்கவில்லை?" என்று சகுந்தலையைக் கேட்டான்.

"தாயான செடிக்கு ஒவ்வொரு பூவாவது விட்டுவைக்க வேண்டும்" என்றாள் சகுந்தலா.

அவர்கள் அறையில் உட்கார்ந்திருந்தார்கள். ஜன்னல் வழியாகத் தொலைவில் சாலை தெரிந்தது. அங்கே சாலைக்குக் கப்பி அடித்துக்கொண்டிருந்த கூலிகள் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அவன், "நாளைக்குப் புறப்படப் போகிறேன்" என்ருன். வெகு நேரம் பேசாமல் இருந்த சகுந்தலா, கடைசியில் "அவர்கள் உன்னைவிட மேல், அத்தான்! மிகவும் மேல்!" என்ருள்.

"யார் அவர்கள்?"

"அதோ, தூரத்தில் சாலைக்குக் கப்பி போடுகிருர்களே, அவர்கள்தாம்! நாட்டுக்குக் கூட, உன்னைப்போல் சோகமான காதற் கதைகளும் நிர்வாணச் சித்திரங்களும் எழுதுபவர்களை விட அவர்கள்தாம் உதவியாய் இருப்பார்கள்."

பொழுது விடிந்ததும் அவன் தன் ஊருக்குப் போய்விட்டான். மறுபடியும் மாமாவின் வீட்டுக்குப் போகவே இல்லை.

அப்புறம் எப்பொழுதோ சகுந்தலைக்கு மணம் நடந்தது.

பல நாட்களுக்குப் பின் அவள் ஒரு புகை வண்டி நிலையத்தில் இரண்டு குழந்தைகளுடன் தென்பட்டாள். ஏக்கம் தோய்ந்த சிரிப்புடன், "நீ கல்யாணம் செய்துகொள்ளாதே அத்தான்! அதிருஷ்டவான் ஆக வேண்டும் என்ருல்...." என்று அவள் கூறினுள்.

அவன் 'விடு, விடு' என்று நடந்து போனுன். வீட்டுக்குப் போனவுடன், 'இரு குழந்தைகளின் தாய்' என்று ஒரு சித்திரம் வரைந்தான். விகாரமாகப் பருத்து, கன்னங்கள் ஒட்டி, முகத்தில் சுருக்கங்களோடு கவலையுடன் சிரித்தது அச்சித்திரம்.

அதன் பின் பலமுறை மழைபெய்தது.

அவன் சாளரத்தின் கதவுகளைக் கூட அடைத்துவிட்டுப் பத்திரமாக அறையில் உட்கார்ந்திருந்தான். அப்பா சலித்துக் கொண்டார். அம்மாவுக்குத் துக்கமாய் இருந்தது. அவன் தேர்வுகளுக்கும் படிக்கவில்லை.

வீட்டிலே இருக்க முடியாமல், "வேலைக்குப் போகிறேன்" என்ருன் அவன்.

"யார் கொடுப்பார்கள்?" என்ருர் அப்பா, இகழ்ச்சியாக.

அம்மாவின் கால்களைத் தொட்டு வணங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டு பெரிய நகரத்துக்கு வந்தான் பையன். பத்திரிகைகளில் அவனுடைய கதைகள் வெளிவந்தன.

சித்திரங்கள் வரைந்தான்.

எங்கேயோ பாழடைந்துகிடந்த வீட்டில், நன்ருய் இருந்த அறை ஒன்றில் இரவில் படுப்பான். தெருவின் பெயர் கூடத் தெரியாது. அவன் தெருப் பெயரையும் வீட்டின் இலக்கத்தையும் தெரிந்து கொண்டால் அம்மாவிடமிருந்து கடிதம் வரும். அதற்காகவே தெருவின் பெயரைத் தெரிந்து கொள்ளவில்லை. தன் வீட்டுக்கும் கடிதம் எழுதவில்லை. அதற்காகவே தபால் பெட்டிகளைக் கண்டால் நடுங்குவான். கடிதங்களைப்பற்றிய நினைவு எழும். அம்மாவின் நினைவும் வரும். எவ்வளவோ செய்திகள் நினைவில் மோதும். பிழைப்பு நடத்துகிறேன் என்ற செய்தி ஞாபகம் வரும். மழைத் துளிகளும் ஞாபகம் வரும்.

கோவிந்தன் எப்பொழுதாவது அவனைத் தேடிக்கொண்டு வந்து, கதை வெளியான பத்திரிகையையும் பத்து ரூபாய்களையும் கொடுப்பான். மேலும் பத்து ரூபாய் வேண்டும் என்ருலும் கொடுப்பான்.

போனதடவை மழையில் நனைந்து இன்னும் மூன்று மாதம் முடியவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து வந்து இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை.

திரும்பவும் மழை வரும்போல இருந்தது. அதனுல் இளைஞன் வேகமாக நடந்தான். அது கடைத் தெருவன்று. பழக்கடைகளோ வெற்றிலை பாக்குக் கடைகளோ இல்லை. அதனுலேயே அவன் வேகமாக

நடந்தான். அவன் பெயர் முகுந்தராவ். பெரிய நகரத்தில் இருக்கிறான். தற்சமயம் தெருவில் நடந்துகொண்டிருக்கிறான். இப்பொழுது அவன் மழையில் நனைவதற்கு முன், போன தடவை மழையில் நனைந்த விவரம்—இக்கதை.

சாலையில் ஓடிச் சென்றும் முகுந்தராவ் தெப்பமாக நனைந்து விட்டான். அன்றிரவு, பாழடைந்த வீட்டின் நல்ல அறையில் படுத்திருந்தும் காலையில் உடம்பில் நோய் கண்டு காய்ச்சல் வந்துவிட்டது.

முகுந்தராவ், கோவிந்தராவின் வீட்டுக்குப் போனான். பையில் சில்லறை இல்லாததால் நடந்தே போனான். கோவிந்தராவ் தன் மனைவி வீட்டுக்கு விலக்கானதால், தலையெழுத்தே என்று கரியடுப்பை விசிறிக் கொண்டிருந்தான்.

முகுந்தராவ் அங்கே போய், "ஜுரம் வந்திருக்கிறதடா, கோவிந்த் ?" என்று சொன்னான். கோவிந்தராவ் கண்ணீர் விட்டான், கரியடுப்புப் பற்றிக்கொள்ளாததால் ! மனைவியையும் தன்னையும் திட்டிக்கொண்டான் ; முகுந்தராவையும் ஆபீசையும் திட்டினான். ஒரு ரிக்ஷாவைப் பேசி முகுந்தராவை உட்காரவைத்துக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தான். "இவன் செத்தால் எனக்குச் செய்தியைத் தெரிவியுங்கள்" என்று டாக்டரிடம் சொல்லிவிட்டுப் போய் விட்டான். முகுந்தராவுக்கு இம்முறை ஆஸ்பத்திரி வசதியாக இருந்தது. 'நோய் அதிகமானால், குறையும் வரையில் சுகமாக இங்கேயே இருக்கலாம் அல்லவா ?' என்று நினைத்துக்கொண்டான்.

இரண்டு நாட்கள் சென்றபின் கோவிந்தராவ் வந்தான்.

அவன், ஊருக்குக் கடிதம் எழுதினனும். அம்மா கடிதம் எழுதியிருந்தாள். கொண்டு வந்து கொடுத்தான். முகுந்தராவ் அதைப் படிக்கவில்லை. அக் கடிதத்தில் என்ன இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

அப்புறம் இரண்டு நாட்களுக்குப் பின் கோவிந்தராவ் வந்தான். அப்பா பணம் அனுப்பினராம்; கொடுத்துவிட்டுப் போனான்.

அன்று மாலையில் நர்ஸ் வந்து, "ஒரு மாதம் வரையில் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்" என்று சொன்னாள். "நியுமோனியாவில் கொண்டுவிட்டு விடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றாள்.

"பயம் எதற்கு?" என்றான் முகுந்தராவ்.

நர்ஸ் திகைத்தாள். கண்களை மலரவிழித்து விசித்திரமாகப் பார்த்தாள். அந்தப் பார்வை முகுந்தராவுக்குப் பிடித்தது. சிறுவயதில் சகுந்தலை அப்படித்தான் பார்ப்பாள். ஆஸ்பத்திரியின் விஷயங்கள் பல அவனுக்குத் தெரியும்.

"பெயர் என்ன ?" என்று நர்ஸைக் கேட்டான். அவள், "எதற்கு ?" என்றாள். அவன், "சொல்லவேண்டாம் பரவாயில்லை" என்றான்.

"அப்படியானல் சொல்லுகிறேன். சரோஜினி........"

பல நாட்களுக்குப் பின், அவள் இந்தத் தொழில் செய்வது விருப்பம் இல்லாதது போல், "இந்தத் தொழிலை ஏன் செய்கிறாய்?" என்று கேட்டான். அவள் ஏக்கத்தோடு பார்த்து விட்டுப் போய்விட்டாள். நாலு நாட்கள் வரை அவன் அந்தக் கேள்வியை மறந்திருந்தான். ஐந்தாம் நாள் திரும்பவும், "இந்தத் தொழிலை எதற்காகச் செய்கிறாய்?" என்று கேட்டான். அவள் ஏங்கிய பார்வையுடன் போய் விட்டாள். பின்பு தினந்தோறும் கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை. மறுபடியும் ஒருநாள் கேட்டான். அவளுக்குக் கோபம் வந்தது. "இப்படிக் கேட்டால் இந்த வார்டிலிருந்து ட்யூட்டியை மாற்றிக் கொண்டுவிடுவேன்" என்றாள்.

"வேலையையே விட்டுவிடக் கூடாதா ?"

அவள் பேசாமல் போய்விட்டாள். மறுநாள் அவள் வரவில்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. முகுந்தராவ் அவள் உண்மையில் வேலையை விட்டு விட்டாள் என்று மகிழ்ந்தான். 'அவள் அழகாய் இருக்கிறாள் ; மிக நல்லவள்' ஏனோ அவள் இந்தத் தொழிலைச் செய்வது அவனுக்கு இஷ்டம் இல்லை. ஒரு

வாரத்துக்குப் பிறகு, ஒருநாள், மாலையில் விளக்கேற்றிய பின் அரை மணிநேரம் சென்றதும், நோயாளிகளைக் காண வந்த உறவினர்கள் எல்லோரும் ஏங்கிய முகத்துடன் வார்டிலிருந்து வெளியேறிய பின் அவள் வந்தாள்.

கோவிந்தராவ் போய்விட்டான். அவன் அம்மா எழுதிய கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அவள் வந்தாள்.

கடிதத்தைத் தலையணைக்கடியில் வைத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்த பின் அவனுக்கு அவள் அவள்தானென்று தெரிந்தது. மறுபடியும் வந்துவிட்டாள். ஒரு நிமிஷம் தலை குனிந்திருந்தவள் புன்னகையைத் தருவித்துக்கொண்டு, "நிச்சயமாக ஜுரம் சரியாகிவிடும், பயப்படாதீர்கள்" என்று சொன்னாள் அவள்.

"பயம் எதற்காக?" என்றான் அவன்.

அவளுக்குக் கவலை உண்டாயிற்று. போய்விட்டாள். அவள் ஏதோ கேட்க வேண்டுமென்று—அந்தக் கடிதம் எங்கிருந்து வந்ததென்று கேட்க—வந்திருந்தாள்.

"வேலையை விடவில்லையா?" என்று கேட்டான் அவன்.

அவள் தலையைக் குனிந்த வண்ணம் போய்விட்டாள். அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டான். இரவில் தூங்கச் சொல்லுவதற்காக அவள் வந்தபோது, மறுபடியும், "வேலையை விட்டு விடக்கூடாதா?" என்று கேட்டான். அவள் சிரித்தாள். "விட்டு விடுகிறேன். ஆனால், சொல்லுங்கள், நீங்கள் சாப்பாடு போடுவீர்களா?" என்று கேட்டாள்.

அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

அவள் சிறிது நேரம் ஆவலுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, மார்பு வரையில் துப்பட்டியை இழுத்துப் போர்த்துவிட்டுப் போனாள்.

அவன் கூப்பிட்டான். அவள் காதில் வாங்கிக்கொள்ளாமல், "தூங்குங்கள்; அடுத்த அறையில்தான் இருப்பேன். ஏதேனும் தேவைப்பட்டால் கூப்பிடுங்கள்" என்று சொல்லிப் போய்விட்டாள்.

ஐந்து நிமிஷங்கள் கூடச் செல்லவில்லை. அவன் கூப்பிட்டான். அவள் வந்தாள். "வேலையை விட்டு விடக்கூடாதா?" என்று கேட்டான்.

அவள் சிரித்தாள். அதில் கவலை, அழகு, மகிழ்ச்சி எல்லாம் கலந்திருந்தன. "உங்களை இங்கிருந்து வேறோர் ஆஸ்பத்திரிக்கு மாற்றி விடும்படி டாக்டரிடம் சொல்லட்டுமா?"

"எதற்காக?"

"பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு!"

அவனும் சிரித்தான். அவள் போய் விட்டாள். நள்ளிரவில் அவனுக்கு விழிப்பு வந்தது.

எதிர்ப் படுக்கையில் சிறு பையன் ஒருவன் அழுது கொண்டிருந்தான். அவனுக்குப் பத்து வயது இருக்கலாம். யாருக்கும் தன் அழுகை கேட்கக் கூடாதென்று அழுது கொண்டிருந்தான். ஆனால் அழுகையை அடக்க முடியவில்லை. எவ்வளவு அடக்கினாலும் விசிப்பு நிற்கவில்லை. இடையிடையில், "அம்மா, அம்மா!" என்று புலம்பினான்.

முகுந்தராவ் முயன்று, சிறிது எழுந்திருந்து, முதுகுக்கு அடியில் தலையணைகளை உயர்த்தி வைத்துப் படுத்துக்கொண்டான். சிறுவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சிறுவன், "அம்மா, அம்மா!" என்று அரற்றிக்கொண்டிருந்தான். முகுந்தராவுக்குக் கண்ணீர் சுரந்தது. பக்கவாட்டில் திரும்பி ஜன்னல் வழியாகச் சாலையைப் பார்த்தான். சுற்றிலும் பார்த்தான், சிலர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். சிலர் முனகிக் கொண்டிருந்தார்கள். சிறுவன் அழுது கொண்டே இருந்தான். ஜன்னலிலிருந்து காணப்பட்ட சாலையில் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. முகுந்தராவ் பார்த்தான். சிறுவன் "அம்மா, அம்மா!" என்று

அரற்றுவதைக் கேட்டு அவனுக்கும் அம்மா வின் நினைவு வந்தது. 'அம்மா என்ன செய்து கொண்டிருப்பாள்? படுக்கையில் தூக்கம் பிடிக்காமல் கண்ணீர் விடுவாள். கடவுளுக்குப் பிரார்த்தனை செய்து கொண் டிருப்பாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து பிள்ளை உடனே வரவேண்டும்; வேலை கிடைக்கவேண்டும்; பிள்ளைக்குக் கல்யாணம் நடக்கவேண்டும்; மருமகள் வரவேண்டும். இப்படி எவ்வள வோ....'

முகுந்தராவ் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

சாலையில் மணியடித்துக்கொண்டு ரிக்ஷா ஒன்று சென்றது.

"இன்னும் தூங்கவில்லையா?" என்று பின்னுலிருந்து குரல் கேட்டது.

முகுந்தராவ் திரும்பிப் பார்த்தான்.

"தூங்குங்கள், இல்லாவிட்டால் காலையில் டெம்பரேச்சர் மறுபடியும் ஏறிவிடும்."

முகுந்தராவ் மறுபடியும், "இந்த வேலையை விடக்கூடாதா?" என்று கேட்க வாயெடுத் தான். அதற்குள் அவள் எதிர்ப்படுக்கையில் இருந்த சிறுவனிடம் போய் விட்டாள். முகுந்தராவ் அவளையே பார்த்துக் கொண் டிருந்தான்.

"ஏனப்பா அழுகிருய்? என் அப்பா இல்ல? அம்மாவை நினைத்துக் கொண் டாயா? இங்கே பார். நான்தான் அம்மா வாம், சௌகரியமாய் இருக்கிறதா?" இப்படிச் சொல்லிச் சிறுவனை மார்போடு அணைத்துக்கொண்டு அவள் சமாதானப் படுத்தினுள். சிறுவன் அழுகையை நிறுத்தி விட்டான்.

அதிக வெளிச்சம் இல்லாத அந்த விளக் கொளியில் முகுந்தராவ் அவள் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் ஒளி மயமாகக் காட்சி யளித்தாள். அம்மாவை நினைத்துக்கொண்டான்.

முதுகெலும்பு வலித்தது, படுத்துக் கொள்ளவேண்டும் போல் இருந்தது. படுத்துக்கொண்டால் அவளைப் பார்க்க முடியாது. அப்படியே சாய்ந்து கொண் டிருந்தான் முகுந்தராவ்.

பத்துப் பதினைந்து நிமிஷங்களில் சிறுவன் தூங்கிவிட்டான். அவனைப் படுக்க வைத்து விட்டு அவள் எழுந்திருந்தாள். முகுந்த ராவின் அருகில் வந்தாள்.

"தூக்கம் வரவில்லையா?"

....

"என் வேலையைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா?"

....

"சரி, விட்டு விடுகிறேன். தூங்கு கிறீர்களா?"

முகுந்தராவ் பேசினுன், "ஒன்று கேட் கிறேன் சொல்வாயா?"

"ஒன்றென்ன? பத்து கேளுங்கள். உங் களுக்குத் தூக்கமாவது வரட்டும்!"

"உனக்குத் தூக்கம் வராதா?"

"சரியான கேள்விதான்!"

"நீ எப்பொழுதாவது பாவம் செய்த துண்டா?"

அவள் நடுங்கினுள். முகுந்தராவ் பார்த் தான். அவள் கண்ணைத் துடைத்துக் கொள்ளவில்லை. முகுந்தராவ் சாலையைப் பார்த்தான். வெண்ணிலவு மேகத்திரையின் பின் மங்கலாய்த் தெரிந்தது.

"உனக்கு ருக்மிணி கல்யாணப் பாடல் கள் தெரியுமா?"

அவள் ஓசைப்படாமல் அடிமேல் அடி வைத்துப் போய்க் கொண்டிருந்தாள். தலையணைகளைக் கழுத்துக் கடியில் இழுத்துக் கொண்டு முகுந்தராவ் படுத்துக்கொண் டான். அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

அவள் அறையில் சென்று நாற்காலியில் உட்கார்ந்து கண்ணைத் துடைத்துக் கொண் டாள். அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

“ என்ன விந்தையான மனிதர்! பைத்திய மாய் இருக்குமோ! இவரைப் பற்றிய தகவல் களைத் தெரிந்து கொள்ளவேண்டும்.” இப்படி நினைக்கும் போதே அவளுக்குப் பொறுமை உண்டாயிற்று. “ எனக்கெதற்கு அவை யெல்லாம்? தெரிந்து என்ன செய்யப் போகிறேன்? எப்படியும் இன்னும் பத்து நாட்களில் போய்விடப் போகிறார். குடியும் குடித்தனமுமாய் மனைவியிடம் போய்ச் சேருகிறார். அவள் இவரைப் பார்த்து, ‘ஐயோ, எப்படி உருமாறி விட்டீர்கள் ?’ என்று அழப்போகிறாள். பின்பு இவர் என்னை மறந்துவிடப் போகிறார்.” அவள் யோசனை நீண்டு கொண்டே போயிற்று. தம்பியின் நினைவு வந்தது. அவனுக்கும் இதே ஊருக்கு மாற்றம் கிடைத்தது சௌ கரியம்தான். இவள் வேலையை விட்டு விடலாம். தம்பியும் மனைவியும் ஜோடியாய் இருக்கும்போது அவர்களுக்கிடையில் தனிக் கட்டையான தான் எப்படி வாழ்க்கை நடத்துவது என்பது அவளுக்கு ஒரு பிரச்சினையாய் இருந்தது. தம்பியைப் படிக்கவைத்தது இவள்தான். இல்லா விட்டால் இவளுக்கு இந்த வேலை செய்ய வேண்டிய தேவையே இல்லை. தம்பி வேலையில் சேர்ந்துவிட்டான். ஏனோ இவளை வேலையை விட்டுவிடு என்று சொல்லவில்லை. தான் மணம் செய்து கொண்டான். இவளை, ‘நீ கல்யாணம் செய்து கொள்’ என்று சொல்லவில்லை. பாவம்! எப்பொழுதாவது.... சொல்வானோ என்னமோ! அவளுக்குத் தெரியாது. அவள் மேஜையில் தலையைச் சாய்த்த வண்ணம் யோசித்துக் கொண் டிருந்தாள்.

முகுந்தராவுக்குத் தூக்கம் வரவில்லை. “ இவள் எதற்காக வேலை செய்ய வேண்டும்? இவளுடைய கணவன் என்ன நினைப்பான்? எவ்வளவு காலம் இப்படி வாழ்க்கை நடத்துவது? இவளும் இரு குழந்தைகளின் தாய் போல் ஆகிவிட மாட் டாளா? எத்தனை நாள் இப்படி....எத்தனை நாள் இப்படி....என்ன வாழ்க்கை இது?”

மறுநாள் காலையிலேயே முகுந்தராவ் காகிதமும் பென்சிலும் எடுத்துக் கொண் டான். டெம்பரேச்சர் நார்மலில் இருந் தது.

மாலையில் அவள் மகிழ்ச்சியோடு வந்தாள். “ உங்களுக்குக் காய்ச்சல் இறங்கி விட்டது. டெம்பரேச்சர் குறிப்பைப் பார்த்துவிட்டு வந்தேன். நாலே நாட்களில் நீங்கள் இங் கிருந்து குணமடைந்து போகலாம் ” என் றாள்.

முகுந்தராவ் சிரித்தான்.

தான் வரைந்த சித்திரத்தை அவளுக்குக் காண்பித்தான். அது, “ வேலையை விட்ட நர்ஸ் ” சித்திரம்.

அந்தச் சித்திரத்தில் இருந்தது அவளே! பக்கத்தில் யாரோ ஒரு ஆண்பிள்ளை; அவ ளைச் சுற்றிலும் இரண்டு, மூன்று குழந்தை கள். அவர்களைக் குழந்தைகள் என்று நினைத்துக் கொள்ளவேண்டும்; வெறும் கோடுகள்!

அவளுக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவ னைக் கண்களால் விழுங்குவது போல் ஆச்ச ரியத்துடன் பார்த்து, “ நீங்கள் நன்றாகப் படம் வரைகிறீர்களே!” என்றாள்.

அவன் இன்னும் கண்ணை மலரவிழித்து, “ எனக்கு வீடு இல்லை, குடும்பம் இல்லை, கல்யாணம் ஆகவில்லை, தெரியுமா?” என்றான்.

அவள் போய்விட்டாள். அந்தச் சித்திரக் காகிதத்தை சாக்கிரதையாக எடுத்துக் கொண்டு, போய்க்கொண்டே, “இது எனக்கு வேண்டும்” என்றாள்.

முகுந்தராவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. சந்தோஷப்பட்டான். அன்றிரவிலும் எதிர்ப் படுக்கையில் இருந்த சிறுவன் அழுதான். அவள் வந்தாள். “ஏனப்பா அழுகிறாய்? நான்தான் உன் அம்மாவென்று நினைத் துக்கொள்” என்று தேற்றினாள். முகுந்த ராவ் அவளையே பார்த்துக் கொண்டிருந் தான். தினந்தோறும் சிறுவன் அழுது கொண்டுதான் இருந்தான். மறுநாள் ஆஸ் பத்திரியிலிருந்து அவன் போகவேண்டும். அன்று இரவு, வேண்டுமென்றே அவள்

கையை மெதுவாக அழுத்திவிட்டுச் சுகமாகத் தூங்கினுன்....இது போன தடவை மழையில் நனைந்த கதை. இப்பொழுது:

முகுந்தராவ் சாலையில் நடந்துகொண்டிருந்தான். பாலம் வந்தது. பாலத்தைத் தாண்டினுன். கடை, கண்ணிகள் இல்லை, அரசாங்கக் 'குவார்ட்டர்'கள் தெரிந்தன. ஒரு பெரிய மழைத்துளி வந்து மேலே விழுந்தது. முகுந்தராவ் ஓட நினைத்தான். நடந்து கொண்டிருந்தான். காற்று 'சிலு, சிலு' வென்று உடலில் தாக்கியது. மேலே இரண்டு துளிகள் விழுந்தன. முகுந்தராவ் வேகமாக நடந்தான். நாலு துளிகள் விழுந்தன. அது அவனுக்கு இதமாகவே இருந்தது; ஆனுலும், பயமாய் இருந்தது. நடையை இன்னும் துரிதப்படுத்தினுன்.

தெரு விளக்குகள் பளிச்சிட்டன. இருட்டி வந்தது. மழை பெய்யத் தயாராய் இருந்தது. ஒரு மரம் தெரிந்தது. அப்பொழுது அதன் கீழே ஒருவன் நின்று கொண்டிருந்தான். சிறிய தட்டில் ஏதோ தின்பண்டம் விற்பவனுகக் காணப்பட்டான். முகுந்தராவ் அவன் அருகில் போய் நின்ருன். தூற்றல்கள் விழுந்தன. முகுந்தராவுக்கு எரிச்சலாக வந்தது. எதிரே 'குவார்ட்டர்'கள் தெரிந்தன. அங்கே விளக்குகள் தென்பட்டன. மழை பெய்து கொண்டிருந்தது. அவன் தன் பக்கத்தில் நிற்கும் மனிதன் பக்கம் பார்வையை ஒட்டினுன். அவன்மேல் தூற்றல் விழவில்லை. அவன் கையில் இருந்த தட்டைப் பார்த்தான். வறுத்தகடலை இருந்தது. முகுந்தராவ் ஜேபியைத் தடவினுன். அவன் பக்கத்தில் இருந்த மனிதன் ஒரு புறமாக ஒதுங்கினுன். முகுந்தராவ் கடலையை வாங்கி ஜேபியில் போட்டுக்கொண்டான். இப்பொழுது முகுந்தராவின் மேல் மழைத் துளிகள் விழவில்லை.

பக்கத்தில் நின்ற மனிதன் தட்டின்மேல் கோணிப்பையைப் போர்த்த வண்ணம் 'குவார்ட்டர்'கள் பக்கமாக ஓடினுன். முகுந்தராவுக்கு வசதியாக இருந்தது. ஒரு நிமிஷம்; இரண்டு நிமிஷம்; மழை வலுத்தது. முகுந்தராவ் 'குவார்ட்டர்'கள் பக்கம் ஓடினுன்.

கடலை விற்பவனை எந்த வீட்டிலும் காணவில்லை. எல்லாக் கதவுகளும் மூடப் பெற்றிருந்தன. முகுந்தராவ் நனைந்தான். மழை பெரிதாயிற்று.

'சட்'டென்று ஒரு வீட்டின் முன் நின்ருன். வாயில் திறந்தே இருந்தது. வாயிற்படியில் நின்ருன். மழை அவன் மேல் விழவில்லை. கைக்குட்டையால் தலையைத் துடைத்துக் கொண்டு வீட்டுக் குள்ளே பார்வையைச் செலுத்தினுன். விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சோபாவில் உட்கார்ந்து கொண்டு ஒரு பெண் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். அவள் இவனைப் பார்த்த பார்வையில் வெறுப்பு நிறைந்திருந்தது. அவள் படித்துக் கொண்டிருந்த கதையைப் பார்த்தான் முகுந்தராவ். என்ன ஆச்சரியம்! அது அவன் எழுதிய கதையே! அவள் திரும்பவும் படிப்பதில் ஈடுபட்டாள். அவன் அவளைப் பார்த்தான். அந்தப் பெண்ணின் முகம் அந்தச் சோகக் கதையைப் படித்ததால் ஏங்கியது. அவள் மன நிலையைப் பார்த்து முகுந்தராவ் மிகவும் மகிழ்ந்தான். அந்தப் பெண் சட்டென்று இவன் பக்கம் திரும்பி, "பக்கத்தில் வராந்தா இருக்கிறது; அங்கே போய் நில்லுங்கள்" என்ருள். முகுந்தராவ் திடுக்கிட்டான். அந்தக் கதை அவன் எழுதியதேதான். அவன் நகர முயன்ருன்.

பின்னுலிருந்து, "ஓகோ, நீங்களா!" என்றது ஒரு குரல். ஒரு கணத்துக்குப்பின் அது, "மழையில் நனைகிறீர்களா?" என்றது. அதில் கோபத்தோடுகூடிய பரிவு தொனித்தது.

அவள் சரோஜினி. அப்பொழுதுதான் உள்ளேயிருந்து வந்தாள்.

"உட்காருங்கள், டவல் கொண்டு வருகிறேன். இவள் என் தம்பியின் மனைவிதான்.... நீ போய்க் காப்பி கலந்து கொண்டு வாம்மா!" என்ருள்.

முகுந்தராவ் சுவரோரமாக நின்ருன். சரோஜினியின் தம்பியின் மனைவி உள்ளே சென்ருள். அவள் முகத்தில் ஆச்சரியம்,

சிறிது வருத்தம், வெட்கம் எல்லாம் கலந்து தோன்றின.

"இவளுக்கு உங்கள் கதைகள் மிகப் பிடித்தவை; அவற்றைத் தினந்தோறும் படிப்பாள்."

முகுந்தராவ் பேசவில்லை.

"நான் வேலையை விட்டுவிட்டேன், தெரியுமா?" அவள் சிரித்தாள்.

"இப்பொழுது சொல்லுங்கள்; என் சாப்பாட்டுக்கு வழி செய்கிறீர்களா?"

முகுந்தராவுக்குச் சந்தோஷமாக இருந்தது. சரோஜினி டவலைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு உள்ளே போனாள். முகுந்தராவ் தலை துவட்டிக் கொள்ளவில்லை. அவனுக்குத் தொடர்ந்து பல எண்ணங்கள் தோன்றின. அம்மாவுக்குக் கடிதம் எழுத வேண்டும். இரண்டு நாட்களுக்குமுன் கோவிந்த் சொல்லிய வேலையைப் பற்றி நன்றாய் விசாரிக்கச் சொல்லவேண்டும். கடிதம்....கடிதம் அம்மாவுக்கு............முகுந்தராவ் சரோஜினி சென்ற அறைவாயிலையே பார்த்தபடி சிறிது நேரம் நின்றான். உள்ளே 'ஸ்டவ்' எரிந்து கொண்டிருந்தது. அந்தப் பெண் வைத்து விட்டுப் போன பத்திரிகையைப் பார்த்தான். வெளியே பெய்து கொண்டிருந்த மழையைப் பார்த்தான். அவன் ஏதோ யோசித்தான். சரோஜினி வரவில்லை.

முகுந்தராவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. கோவிந்தராவிடம் போகவேண்டும். அம்மாவுக்குக் கடிதம் எழுதவேண்டும். உள்ளே ஸ்டவ் எரிந்து கொண்டிருந்தது. யாரும் வெளியே வரவில்லை. இரண்டு, மூன்று நிமிஷங்கள் கடக்கும் முன்பே, முகுந்தராவ் நனைந்துகொண்டே சாலையில் நடந்துபோய்க் கொண்டிருந்தான்.

எழுதும் ஆற்றல், அது பின்பற்றப்படும் நோக்கத்திற்குத் தகுந்தாற்போல், குழந்தைத்தனமாகவோ, பொழுது போக்காகவோ, கைத்தொழிலாகவோ, கலையாகவோ, விஞ்ஞானமாகவோ அல்லது ஒரு நற்பண்பாகவோ காட்சியளிக்கும்.

—ஷ்லேகெல்

* * * *

புது கருத்துக்களை நன்கு பழக்கத்தில் கொண்டு வருவதும், நன்கு பழகியவற்றைப் புதுமையாக்குவதும் எழுத்தாளரின் இரு சீரிய ஆற்றல்களாகும்.

—ஜான்சன்

* * * *

புத்தம் புதிய கருத்துக்களை வெளியிடுவதாலேயே ஒருவர் மிகவும் தனித்தன்மை உள்ள எழுத்தாளர் என்ற சிறப்பினைப் பெறுவதில்லை; ஆனால், அவர் சொல்ல விரும்புவனவற்றை, இதற்கு முன்னர் யாரும் சொல்லாத முறையில் கூறுவதால்தான்.

—கோயதே

பேந்த்ரே

கர்னுடகத்தின் 'ரசரிஷி' என்ற புகழப் பெற்றுள்ள பேந்த்ரே (Bendre) அவர்களின் முழுப்பெயர் தத்தாத்ரேய ராமசந்த்ர பேந்த்ரே ஆகும். இன்றைய கன்னட இலக்கியச் செல்வர்களில் ஒருவராய இவர் 'அம்பிகாதனய தத்தா' என்ற புனைப்பெயரில் எழுதிவருகிருர்.

மேலைநாட்டு இலக்கியத்தின் தொடர்பால் பொருள் பொதிந்த கன்னடக் கவிதைகள், காவியங்கள் தோன்றிய காலத்தில், அவற்றை வளர்த்துப் பெருமையுறச் செய்த சிறப்பு இருவரைச் சாரும். தென் கர்னுடகத்தில் இப் பணியைத் திரு பி. எம். ஸ்ரீ கண்டையா சிறப்புடன் ஆற்றி வந்தார். அதே சமயத்தில் வட கர்னுடகத்தில் திரு. பேந்த்ரே சில எழுத்தாள நண்பர்களுடன் கலந்து 'கௌயர கும்பு' (நண்பர் குழு) என்ற இலக்கியக் குழு ஒன்றை நிறுவினர். இதன் மூலம் சிறந்த இலக்கியப் பணியை ஆற்றலானர். அக்காலத்தில் இளைஞராக இருந்த பேந்த்ரே புதுமையுணர்ச்சியும், மறைபொருளும் நிறைந்த பல எளிய தலைசிறந்த கவிதைகளை இயற்றினர். அவரைப் போலவே அவர் குழுவைச் சார்ந்த மற்றும் சிலரும் பிற்காலத்தில் சிறந்த கவிஞர்களாகத் திகழலாயினர். பேந்த்ரேவின் ஆதரவில் வளர்ந்து சிறப்புற்ற கவிஞர்களில் சிலர் விநாயகா, முகளி, மதுர சென்ன, ஆனந்த கந்தா முதலியோராவர்.

1930 ஆம் ஆண்டில் பெல்காமில் நடைபெற்ற 'கவி சம்மேளன'த்தில் 'ஹக்கி ஹாருத்திடே' (பறவை பறக்கிறது) என்ற கவிதையை அரங்கேற்றியதன் மூலம் பேந்த்ரே கர்னுடகத்தில் ஒரு பெரும்புயலை வீசச் செய்தார். அதிலிருந்து சிறுகச்சிறுக அவருடைய புகழ் வளரத் தொடங்கியது. காலம் செல்லச் செல்ல பல இலக்கியச் செல்வங்களைப் படைக்கலானர். இதுவரையில் பல அரிய கதைப் பாடல்களையும், சிறு காவியங்களையும் இயற்றியுள்ளார்.



பேந்த்ரே, 1896-ல் தார்வாரில் ஒரு மகாராஷ்டிர அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். அவர் பல்லாண்டாக ஷோலாபூரில் கன்னடப் பேராசிரியராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார். தற்பொழுதும் மைசூர், தார்வார் வானெலி நிலையங்களில் இலக்கிய ஆலோசகராகப் பணியாற்றி வருகின்ருர். தற்பொழுது தார்வாரில், கவிஞர்கள் இருப்பிடமாகப் புகழப் பெற்றுள்ள சாதன கேரியில் வாழ்ந்து வருகிருர்.

அவருடைய கவிதைகளில் இடம்பெருத பொருள்களே இல்லை எனலாம். எல்லாக்

கவிஞர்களையும் போலவே துவக்க காலத்தில் இயற்கையின் அழகுக் காட்சிகள், இளைஞர் மனத்தில் கொந்தளித்தெழும் காதல், அன்பு, நாட்டுப்பற்று போன்ற உணர்ச்சிகள், கலை, தத்துவம், இல்வாழ்க்கைச் சிக்கல்கள்—வாழ்க்கையில் தோன்றிடும் இன்ப துன்பங்கள் முதலியவற்றைக் குறித்து கவிதைகள் இயற்றினர். அவருடைய கவிதைகள் யாவற்றிலும் ஒரு தனிச்சிறப்பு, அவற்றின் நடைதான். நாடோடிப் பாடல்களின் எளிய கவர்ச்சியான நடை அவருடைய கவிதைகளில் மிளிர்வதால் பொதுமக்கள் யாவரும் அவர் கவிதைகளால் கவரப்பட்டதில் வியப்பில்லை.

பேந்த்ரே, தாம் கண்ட பொருள்கள் யாவற்றுக்கும் தம் கவிதைகளில் ஒரு புதிய உருவத்தை அளித்துள்ளார். எடுத்துக் காட்டாக அவருடைய 'ஹக்கி ஹாருத்திடே' (பறவை பறக்கிறது) என்ற கவிதையில் நுண் பொருளான காலத்தைத்தான் பருப்பொருளான பறவையாக உருவகித்துள்ளார். அவர் பாடலின் வாயிலாகக் காலத்தைப் பார்த்து, உணர்ந்து, அனுபவிக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கிவிட்டார். எங்கும் பரவி நிறைந்துள்ள காலத்தை ஒரு பறவை என்ற சின்னமாகக் காட்டி, அதனுடைய இசை, நிறம், மணம் ஆகியவற்றுடன் திகழச் செய்துள்ளார்.

மற்ற கவிதைகளைப் போலவே அவருடைய இயற்கைக் கவிதைகளும் சிறப்புடன் விளங்குகின்றன. 'பௌகு' (வைகறை), 'பௌதிங்கள நோட' (நிலவொளியைப் பார்க்க), 'பாதரகித்தி' (வண்ணத்திப் பூச்சி), 'ஷ்ராவணு' (ஷ்ராவண மாதம்) முதலிய கவிதைகளில் வருணனைகளைப் படிக்கும் பொழுது வானவர் உலகத்தில் வாழ்வது போன்ற உணர்ச்சி தோன்றும். வானுலகத்தின் கவர்ச்சி, நிலவின் அமைதி, நிறைவற்ற வண்ணத்திப்பூச்சி, ஷ்ராவண மாதத்தின் இயற்கைச் செறிவு முதலியன கருத்தைக் கவரும் பெற்றியுடையன.

அவருடைய காதல் கவிதைகள் கருத்தாழம் மிக்கவை. அவை உணர்ச்சி ததும்புவன எனினும், பொருள் நிறைந்து பொதுத் தன்மை நிறைந்தனவாகும். 'புட்டவிதவே' (இளம் கைம்பெண்), 'ஹெணத ஹிந்தே' (பிணத்திற்குப் பின்னல்), 'ஹுப்பள்ளி யாவன' (ஹுப்ளியிலிருந்து வந்தவன்) முதலிய கவிதைகளில் சமுதாயத் தீமைகள், பெண்களின் துயர்கள் ஆகியவற்றை உணர்ந்து தம் உணர்ச்சிகளைக் குவித்திருப்பதைக் காணலாம். 'துத்தின சீல' (சோற்றுப்பை) என்ற கவிதையில் கவிஞர் தம் புரட்சி மனப்பான்மையைக் காணலாம். 'குருடு காஞ்சனு' (குருட்டுப் பொன்) என்ற கவிதையில் பணக்காரர் ஏழைகளுக்கு இழைக்கும் கொடுமைகளை விளக்கிப் பொது உடைமையைப் பிரசாரம் செய்வதைப் பார்க்கலாம்.

அவருடைய சிறு காவியங்களில் 'சகிகீதா' (காதலியின் கவிதை) புகழ் பெற்றதாகும். ஒருவகையில் அது அவருடைய வாழ்க்கைத் தொடர்புடையதாகும். அவருடைய திருமணத்தில் துவங்கி, இல்வாழ்க்கையில் அவர் பட்ட இன்ப துன்பங்களையும், வாழ்க்கையில் இணக்கத்தைப் பெறுவதற்கான அவருடைய பெருமுயற்சியையும் அதில் குறித்துள்ளார்.

அவருடைய தேசிய கவிதைகள் ஆதரவற்ற இந்திய மக்கள் கூட்டத்தின் துன்பங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. அக்கவிதைகளில் அங்கதக் குறிப்பு நிறைந்திருக்கின்றது. 'மூவத்து மூறு கோடி' (முப்பத்து முக்கோடி), 'கனசி நொளகொந்து கனசு' (கனவில் கனவு) ஆகிய இரண்டு கவிதைகளும் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

மகரிஷி அரவிந்தரும் அவருடைய நூல்களும் பேந்த்ரேயைப் பெரிதளவு கவர்ந்தன. அதுபோலவே மற்ற யோகிகளின் அறிவுரைகளும், கர்னடகத்தைச் சேர்ந்த பல யோகிகள், சமயப் பெரியார்கள், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஞானிகளின் பாடல்கள் ஆகியவை அவரை மிகவும் கவர்ந்தன. அவருடைய 'தும்பி', 'சச்சிதானந்தா' முதலிய பல கவிதைகளில் இந்த உண்மைகள் சிறக்கக் காணலாம். அண்மையில் அவர் எழுதி

வரும் கவிதைகள் யாவும் சமயம் அல்லது தத்துவ உண்மைகளுடன் மிளிர்வதைக் காணலாம்.

கவிஞர் பேந்த்ரே ஒரு நாடகாசிரியரு மாவார். அவர் சில சிறு நாடகங்களே இயற்றி இருப்பினும் அவை மக்களின் மனத்தைக் கவர்ந்துவிட்டன. 'யுத்தாரா' (முன்னேற்றம்), 'நகெய ஹொகெ' (சிரிப்பின் புகை), 'ஹொாச சம்சாரா' (புதிய குடும்பம்) முதலியன அவற்றில் மிகச் சிறந்தனவாகும். அவருடைய ஓரங்க நாடகங்களின் தொகுப்பான 'ஹொாச சம்சாரா' பம்பாய் அரசினரிடமிருந்து ரூ. 2,000 பரிசு பெற்றுள்ளது. மற்றும் அவர் சில பொதுக் கட்டுரைகளும், திறனாய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவருடைய எளிய, தூய, நகைச்சுவை ததும்பும் கவிதை உள்ளத்தை அவற்றில் காணலாம்.

கவிஞர் பேந்த்ரேவுக்குத் தற்பொழுது வயது 65 ஐக் கடந்துவிட்டது. அவருடைய 60 ஆவது நிறைவு விழாவில் 'அருளு மருளு' என்ற தம் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். சாஹித்ய அகாதெமி இத்தொகுப்புக்கு ரூ. 5000 பரிசு கொடுத்து கவுரவித்தது. 1940-ம் ஆண்டு இவர் கன்னட சாஹித்ய சம்மேளனத்துக்குத் தலைமை தாங்கினர். அவர் கன்னட மொழியில் சிறந்த புலமையுடையவர்; மேலும், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளிலும் நல்ல பயிற்சி உள்ளவராவர். மற்றும் அவர் நல்ல பேச்சாளருமாவார். தம்முடைய கவிதைகளை உணர்ச்சியுடன் பாடி எளிதில் விளக்கும் சிறப்புடையராவர்.

Publishers Please ! ! !

Any Problem with your Printer !

Please ask him to contact us — May be we could help him.

. . . . The Pioneer Supplier to the Printing & Allied Trade.

THE STANDARD PRINTING MACHINERY CO.,

SHANTI BUILDING, 9, MOUNT ROAD,

MADRAS-2

&

THE STANDARD TYPE FOUNDRY (P) LIMITED

4, Himalaya House,
79, Palton Road,
BOMBAY.

Sachdeva Mansion,
Asaf Ali Road,
NEW DELHI.

14/2, Old China Bazaar
Street,
CALCUTTA.

தகழி சிவசங்கர பிள்ளை

மகாகவி வள்ளத்தோலுக்குப் பிறகு, மிகச் சிறந்த புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கர பிள்ளை ஆவார். மொழி, நாடு என்ற எல்லைகளைக் கடந்து, மற்ற மொழி பேசும் இந்தியரிடையேயும், அயல் நாட்டவ ரிடையேயும் இவருடைய பெயர் பரவியுள்ள தைப்போல வேறு எந்த மலையாள எழுத்தாள ரின் பெயரும் பரவவில்லை என்றால் அது மிகை யாகாது. இந்திய மொழி ஒன்றில் புதியன புனையும் ஒருவருடைய புகழ் இந்த அளவுக்கு உலகம் முழுவதும் பரவி இருப்பது குறிப் பிடத்தக்கது.

தகழி என்ற புகழ்ப்பெயர் தாங்கியுள்ள தகழி சிவசங்கர பிள்ளைக்கு இப்பொழுது வயது 48. கேரளாவில் அம்பலப்புழாவின் அருகில், ஒரு சிறிய கிராமத்தில், ஒரு நடுத் தரக் குடும்பத்தில் அவர் பிறந்தார். அவர் திருவனந்தபுரத்தில் சட்டக் கல்லூரியில் பயின்று வழக்குரைஞர் (Pleader) பட்டத்தைப் பெற்று, அம்பலப்புழாவில் வழக்குரைஞராகப் பணியைத் துவக்கினர். சென்ற ஆண்டு தான் அவர் இப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

தகழி சிறுவயதிலேயே எழுதத்துவங்கி னர். இருபது, இருபத்தோரும் வயதுகளில் தம் உணர்ச்சிகளை யெல்லாம் எழுத்தில் பொறித்து வரலானர். அவர் திருவனந்த புரத்தில் பயின்று வந்த பொழுது கேசரி ஏ. பாலகிருஷ்ண பிள்ளையுடன் அதிகத் தொடர்பு கொண்டார். பாலகிருஷ்ண பிள்ளை தற்கால மலையாள இலக்கியத்தின் தந்தை ஆவார். பல மொழிகளிலும் இலக்கியங் களிலும் புலமை பெற்ற அவர் 'கேசரி' என்ற பத்திரிகையின் வாயிலாகச் சிறந்த பணி ஆற்றி வந்தவர்; அவர் சொல்லிலும் செயலி லும் புரட்சி மணம் கமழ்ந்தது. வாழையடி வாழையாகச் சமுதாயத்தில் ஊறிப்போயிருக் கும் தவறான நம்பிக்கைகளையும், போலிக் கொள்கைகளையும் தகர்த்தெறிந்து அவற் றுக்கு மாற்றாகப் புதிய கொள்கைகளையும் புதியதோர் உயிர்ச்சக்தியையும் மலையாள மக்களுக்கு ஊட்டுவதற்காக அவர் தம் எழுத் தாலும், பேச்சாலும் போராடி வந்தவர். இதற்கெனப் பல அரிய கட்டுரைகளை எழுதி வெளியிட்டதுடன், மேலை நாட்டு இலக் கியங்களை மொழி பெயர்த்தும் அவர் வெளி யிட்டு வந்தார்.

இத்தகைய பேரறிஞருடைய தொடர்பு தகழிக்குக் கிடைத்தது உண்மையில் ஒரு பெரும்பேறு என்றுதான் கூறவேண்டும். இத்தொடர்பு அவர் வாழ்க்கையில் அழிக்க முடியாத ஒரு பெரும் மாற்றத்தை உண்டாக்கிவிட்டது. கேசரி பாலகிருஷ்ண பிள்ளை தம் இல்லத்தில் நடத்தி வந்த 'கேசரி சதஸ்' என்ற கருத்தரங்குகளில் தகழி தவறா மல் பங்கெடுத்து வந்தார். அவருடைய திறமையை உணர்ந்த பாலகிருஷ்ண பிள்ளை அவரை நன்கு பயன்படுத்த வேண்டுமென்று விரும்பி அவருக்கு நிரம்பப் பணி கொடுக்க லானர். குறிப்பாக மேலை நாட்டுச் சிறந்த கதைகள் பலவற்றை மொழி பெயர்க்கும் பணியைக் கொடுத்தார். தகழி இப்பணியை மிகவும் விரும்பித் திறம்படச் செய்தார். இதன் வாயிலாக மேலை நாட்டுச் சிறந்த கதை ஆசிரியர்களான பால்ஜாக், ஸ்டெண்டால், ஜோலா, ட்செகோவ், ப்ரௌஸ்ட், மாபசான், டோஸ்டொவிஸ்கி முதலிய பலருடைய எழுத் துக்களுடன் தகழி ஆழ்ந்த தொடர்பு கொண் டார். அவருடைய இலக்கியப் பணிக்கு இது ஒரு திருப்பு மையமாக அமைந்தது எனலாம். அவர்களைப் பின் பற்றிச் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய தகழி நாளடைவில் தனித்தன்மை யுள்ள சிறந்ததொரு கதை ஆசிரியராக மாறி யதில் வியப்பில்லை. அவர் எழுதத் துவங்கிய காலத்தில் சமுதாய அநீதிகள், ஏழைகளின் துன்பங்கள், பணக்காரர் கொடுக்கும் தொல்லைகள், தூய காதலுக்கிடப்படும் தடை கள், ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்கள்

முதலியவையே அவருடைய கதைகளில் முக்கிய இடம் பெற்றன.

தகழியின் எழுத்துச் சிறப்புக்களில் முக்கிய மானது, அவருடைய இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலித்ததே ஆகும். சமுதாயத்தில் பல்வேறு மக்களினங்களின் வாழ்க்கை அமைப்புக்களை நன்கு உணர்ந்து அவற்றைத் தம் கதைகளில் தக்க முறையில் பயன்படுத்தினர். வேளாளர், தொழிலாளர், மீனவர், இல்லத்துப் பணியாட்கள், ரிக்‌ஷா இழுப்பவர், பரத்தையர், போலி பக்தர்கள், தவறான வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் கோவில் அர்ச்சகர், பாதிரிமார்கள் முதலியவர்கள் அவருடைய கதைகளில் இடம்பெற்றிருந்தனர். சமுதாயத்தின் இனப் பாகுபாட்டையே தகர்த்தெறியும் வன்மையுடன் திகழ்ந்தன அவருடைய கதைகள்.

தகழியைப் பின்பற்றிப் பல இளம் எழுத்தாளர்கள் இத்தகைய முற்போக்கு முறையில் எழுதத் தொடங்கினர். இதன் விளைவாகப் புதியதொரு இலக்கியமே மலையாளத்தில் உருவாகத் தொடங்கியது. 'ஜீவல் சாஹித்யம்' (வாழும் இலக்கியம்) என்று முதற்கண் பெயர் தாங்கிய இந்த இலக்கியப் போக்கு, 'புரோகமன சாஹித்யம்' (முற்போக்கு இலக்கியம்) என்று பிற்காலத்தில் வழங்கத் தொடங்கியது. வெறும் கற்பனைக் கதைகளையே எழுதி வந்த பழைய எழுத்தாளர்கள் இந்தப் புதிய இலக்கியப் போக்கையும், தகழி போன்ற முற்போக்கு எழுத்தாளரையும் வன்மையாகத் தாக்கினர். ஆனால் தகழியும் அவரைப் பின்பற்றிய முற்போக்கு எழுத்தாளரும் சற்றும் தளராது தம் வழியே சென்று, சிறந்த இலக்கியங்களைப் படைக்கலாயினர்.

தகழியின் துவக்ககாலப் புதினங்களான 'தோட்டியுடே மகன்' (தோட்டியின் மகன்), 'ரெண்டிடங்கழி' (இரண்டு படி) ஆகிய இரண்டும் சிறப்புடையன ஆகும். முந்திய புதினத்தில் தோட்டிகளின் வாழ்க்கையையும், இரண்டாவது புதினத்தில் வேளாளர் வாழ்க்கையையும் திறம்படப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். சிறந்த பாத்திரங்களைப் படைத்து அவற்றைக் கையாளும் திறமையில் தகழி மிகச் சிறந்த வல்லுநர் ஆவார். இவருடைய புதினங்களில் தலைசிறந்தது 'செம்மீன்' (எரு—கடல்வாழ் பிராணி) ஆகும். மீனவப் பெண்ணுக்கும், முகம்மதிய இளைஞனுக்கும் இடையே தோன்றி வளர்ந்த காதல் கதையை இப்புதினம் மனம் கவர் முறையில் சித்தரிக்கின்றது. இயற்கையான வருணனைகளுடன், காதலின் சீர்மையையும் திறம்படச் சித்தரிக்கும் இந்தப் புதினம் சாஹித்ய அகாதெமியின் பரிசையும் பெற்று அகில இந்தியப் புகழ் பெற்றுவிட்டது. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும் இந்தப் புதினம் விரைவில் உலகப்புகழ் பெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

இதுவரையில் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும், பத்துக்கு மேற்பட்ட புதினங்களையும் அவர் எழுதியுள்ளார். மிகவும் கடினமாக உழைக்கும் இவருடைய கதைகள் கருத்தாழம் மிக்கவை. அவருடைய நடையோ செயற்கையாக இல்லாமல், கருத்தை நேரடியாகத் தெளிவாகவும், சுருக்கமாகவும் சொல்லக்கூடிய சிறப்பைப் பெற்றுள்ளது. சொற்பின்னல்கள் முதலியன இல்லாமல் இவருடைய நடை தெளிவாக இருப்பதால், படிப்பவர்கள் அவர் சொல்ல விரும்பியதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். இவ்வளவு எளிய, தெளிந்த நடையில் எழுதும் பெருமை மலையாள எழுத்தாளர்களில் இவர் ஒருவரையே சாரும்.

எளிய தோற்றத்தை உடைய இவர் தோற்றக் கவர்ச்சியும், இல்லாதவரென்றே கூறவேண்டும். இருப்பினும் இவர் நல்ல மனமுடையவராதலால் எல்லாராலும் விரும்பப்படுபவராவார். ஓயாது படித்துக் கொண்டிருக்கும் அவருடைய பொழுது போக்கு வேளாண்மையாகும். வேளாளர் குடும்பத்தில் பிறந்த அவர் வேளாளர்க்கே உரிய நேர்மையான சீற்றத்துடன் தம் எழுத்தைப் பயன்படுத்தி சமூகத்தை முன்னேற்றி வருகிறார்.

ராயப்ரோலு சுப்பாராவு

இன்றைய தெலுங்கு இலக்கியத்தின் முன்னேடிகளாகிய இருவரில் ஒருவர் திரு. ராயப்ரோலு சுப்பாராவு ஆவார். மற்றெருவர் காலஞ்சென்ற குருஜாடா அப்பாராவு ஆவார். குருஜாடா அப்பாராவு தெலுங்கு உரை நடையின் நடையிலும் மொழி அமைப்பிலும் பெரியதொரு புரட்சியை உண்டாக்கி விட்டார். ராயப்ரோலு பழைய கவிதை அமைப்பு, மொழிச் செறிவு முதலியவற்றைப் போற்றினுலும் கதைப் பாடல்களுக்கேற்ற புதிய சொற் செறிவையும், நடை அழகையும் அவர் தோற்றுவித்தார்.

அவர் 1892-ஆம் ஆண்டு, குண்டூர் ஜில்லாவில், கல்வி அறிவுபெற்ற அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். அவர் சிறுவயதிலேயே கவிதையில் தீராத பற்று கொண்டிருந்தார். உயர்நிலைப்பள்ளி மாணவனுக இருக்கும்பொழுது 1908-ஆம் ஆண்டிலேயே கவிதைகள் இயற்றத் தொடங்கிவிட்டார். பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து குண்டூர் கிறிஸ்தவக் கல்லூரியிலும், ஹைதராபாத் நிஜாம் கல்லூரியிலும் பயின்றூர். இருப்பினும், அவருக்குப் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பில் அதிகமான ஈடுபாடிருக்கவில்லை. இந்த வகையில் அவர் தன் குருவான தாகூரை ஒத்திருந்தார்.

இளம் வயதில் ராயப்ரோலு அவதானத் துறையில் ஈர்க்கப்பட்டார். அவர் தன் அம்மானுன அவ்வாரி சுப்பிரமணிய சாஸ்திரியுடன் சேர்ந்து அஷ்டாவதானம், சதாவதானம் முதலிய அவதான நிகழ்ச்சிகளில் திறம்படப் பணியாற்றினுர். இருப்பினும், காலப்போக்கில் ஆங்கில மொழிக் கதைப் பாடல்களின் எளிமையும், அழகும் அவரைக் கவர்ந்து அவ்வழியைப் பின்பற்றச் செய்தன. முதலில் 'த்ரணகங்கணம்' என்ற ஒரு காதல் காவியத்தை இயற்றினுர். அதில் ஒரு காதலன் பசும் புல்லால் அமைந்த கைவளையைத் தன் காதலிக்குத் தூய காதலின் சின்னமாகத் தரும் நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருந்தது. மரபு வழி நடை, சொல்லமைப்பு முதலியன இல்லாத தெலுங்குக்கே அயலான ஒரு காவியம் அது என்று புலவர்கள் குறை கூறினுர்கள். ஆனுல் இளம் புலவர்களோ தற்காலத் தெலுங்கு இலக்கியத்தின் 'முதல் காவியம்' என்று அதைப் போற்றினுர்கள். அதன் பிறகு 'ஸ்வப்ன குமாரம்,' 'லலிதா' என்ற இரு காவியங்களை இயற்றினுர். இவற்றிலெல்லாம் தூய காதல் இடம்பெற்றிருந்தது. இவை

மாபெரும் எழுத்தாளன் என்பவன் தன் வாசகர்களின் நண்பனும் ஆதரவாளனும் ஆவான்.

—மெக்காலே

காதல் காவியங்களே எனினும், மரபு வழிக் காவியங்களில் இருந்ததைப் போன்ற காமச் சுவையும், ஆபாச வருணனைகளும் நிறைந் திருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

'விரஹ வீதி' (பிரிவின் துயரம்) என்ற ஒரு சிறு கவிதையில் காதலனைப் பிரிந்திருக்கும் காதலியின் துன்பம் முழுவதையும் படம் பிடித்துக் காட்டி விடுகிறார்:

"தங்கக் கிண்ணத்தில் சந்தனக் குழம்பு உலர நறுமணப் பூச்சு அறைகல்லிலேயே உறிஞ்சப்பட, நறுமண மாலைகள் கதவுகளில் அணிவாரற்றுக் கிடக்க, சருகாய் மெலிந் துள்ள பெண்ணே, நீ யாருக்காகக் காத்திருக் கிறாய்?...... அணைபோட இயலாத பருவத் துடிப்புடன், பொங்கி வரும் கொதிக்கும் பால் போன்ற காதல் நிறைந்த உன் நெஞ்சத்தை இந்தக் கார்காலத்தில் யாருக்குக் கொடுத்து விட்டாய் பெண்ணே?" இந்தப் பாடலில் நம் சங்க இலக்கியத்தின் அகத்திணையில் காணப் படும் எளிமையும் பொருளாழமும் விளங்கு வதைக் காணலாம்.

ராயப்ரோலுவின் கவிதைகளில் உள்ள மற் றொரு முக்கிய அம்சம் நாட்டுப் பற்றாகும். பாரதியாரைப் போல இவர் விடுதலை வேட் கையையும் நாட்டுப்பற்றையும் தூண்டும் பல பாடல்களையும் பாடியுள்ளார். ஆந்திரர்களின் பழம்பெருமையும், பாரதத்தின் தனிச் சிறப் பும் அவருடைய கவிதைகளில் வீறு நடை போடுகின்றன. தம் கவிதைகள் மூலம் அவர் அக்காலத்தில் ஆந்திர இளைஞர்களின் நெஞ் சத்தில் வீர உணர்ச்சிக்கு வித்திட்டு விடுதலைப் போராட்டத்தில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய் தார். அவருடைய விடுதலை இயக்கக் கவிதை களில் ஆழ்ந்த உணர்ச்சி மட்டுமல்லா மல் சிறந்த பொருளாழமும் விளங்குவதைக் காணலாம். இவற்றில் மிகச் சிறந்த கவிதை 'ஜன்ம பூமி' யாகும்.

"எந்நாடு சென்றாலும் எவ்விடம் போனாலும்
உன் தாயகத்தின் பெருமைதனைப் பறை
சாற்று
பாரதத்தின் உயர்பெருமைக் கேற்ப நீ வாழ்!
பழம்பிறப்பில் என்ன தவம் செய்தாயோ?
எந்தயோகம் புரிந்தாயோ அன்புள்ள
தோழா!
இப்பிறப்பில் இப்புனித நாட்டில் நீ பிறக்க?
எந்த நல்ல பூவினை நீவிளைந்தாயோ
இந்தத் தெய்வத் தாயின் திருமடியில்
நீ உதிக்க?

*　*　*

வீழும் பூக்கள் எழுப்பும் இன்னொலியும்
வாழும் இலக்கியம் திகழும் நற்சிறப்பும்
நிறைந்தது இந்தத் தெய்வத் திருநாடு
சிறந்த புனிதம் செறிந்ததும்
உன் தொல்புகழ் நாடே
ஏன் இந்த வெட்கம்? ஏன் இந்தத் தயக்கம்?
பெருமையுடன் கூறு 'நான் பாரதத்தின்
புதல்வன்' என்று!"

இவை அவருடைய 'ஜன்ம பூமி'யில் பொருள் செறிவுமிக்க சில வரிகள்.

அக்காலத்தில் 'கீதாஞ்சலி'யின் வாயிலாக உலகப்புகழ் பெற்றுவிட்ட குருதேவ் தாகூரால் ராயப்ரோலு கவரப்பட்டார். 1915 ஆம் ஆண்டில் அவர் சாந்திநிகேதனுக்குச் சென்று இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கி, குருதேவ், மற்றும் பல பெரிய அறிஞர்களிடம் அவர் கற்கலானார். அதற்குப் பிறகு அவர் வெளியிட்ட 'ஜட குச்சுலு' (ஜடைகுச்சுகள்) என்ற காவியத் தொகுப்பில் தாகூரின் மணம் கமழ்வதைப் பார்க்கலாம்.

'ஸ்நேஹலதா தேவி', 'கஷ்ட கமலா' என்ற இரண்டு துன்பியல் காவியங்களை அவர் இயற்றியுள்ளார். அதிக வரதட்சணை கொடுத்து தனக்கு மணம் முடிக்க முடியாத தால் தன் பெற்றோர் படும் துயரத்தைக் கண்டு மனம் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட ஒருபெண்ணின் சோகக் கதையே 'ஸ்நேஹலதா தேவி' என்ற காவியம். அவர் சாந்திநிகேதனில் இருந்த பொழுது வங்காளத்தில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சியைக் கொண்டே இக் காவியத்தை இயற்றினாராம்.

பிறகு, சிறிது காலம் புலவர்கள் குழுமி யுள்ள காசியில் சென்று அவர்களுடன் அள வளாவி தன் புலமையையும், கூர்ந்த மதி நுட்பத்தையும் மேலும் பெருக்கி மீண்டார். பிறகு பல காலம் விஜயவாடாவில் தங்கி இருந்து ஓயாது கவிதைகள் இயற்றி வந்தார். அக்காலத்தில் ஆந்திரர்களின் சிறப்பினைப்

பாடும் பல பாடல்களை இயற்றினர். அத்தொகுப்பு 'ஆந்திராவளி' என்று பெயர் தாங்கியுள்ளது. 'தெலுகு தோட' (தெலுங்குப் பூங்கா) என்பதும் இத்தகைய பாடல்கள் அடக்கிய மற்றொரு தொகுப்பாகும். ஆந்திர இளைஞர்களுக்கு அழகுணர்ச்சி, விடுதலை வேட்கை, தன்மான உணர்ச்சி முதலியவற்றை இவை ஊட்டின.

1921 ஆம் ஆண்டு அவர் உஸ்மானியாப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினர். விரிவுரையாளர் பணியில் தொடங்கி சில ஆண்டுகளில் தெலுங்குப் பேராசிரியராக உயர்வு பெற்றார். சுமார் பதினைந்து ஆண்டுகள் அங்குப் பணியாற்றிய பிறகு வாரங்கல் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினர். 1950-ல் அவர் ஓய்வு பெற்ற பின்னரும் 1956-ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் வெங்கடேஸ்வராப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினர். சிறிது காலம் அவர் ஹைதராபாத் வானொலியின் ஆலோசகராகப் பணியாற்றினர்.

பழம் பெரும் இலக்கியங்களிலும் இலக்கிய மரபுகளிலும் நன்கு புலமை பெற்ற அவர் புதிய கதைப்பாடல் இலக்கணத்தையே வகுத்துவிட்டார். 'ரம்யா லோகம்', 'மாதுரி தர்சனம்' ஆகிய இரண்டு நூல்களும் அவருடைய புதிய கொள்கைகளை விரிவாக விளக்கும் செய்யுளியல் நூல்களாகும். இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் அவர் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு 'வனமாலா' என்பதாகும். மற்றும் அவர் சிந்தனையைக்கிளறும் 'ரூபநவநீதம்' என்ற தனித்தன்மை வாய்ந்த நாடகத்தையும் இயற்றினர். மேலும், பவபூதியின் 'உத்தர ராம சரிதை'யையும் காளிதாசரின் 'மேக தூத'த்தையும், ஓமார் கயாமின் 'ருபயட்'களையும், தாகூரின் 'ஊர்வசி'யையும் மற்றும் சில காவியங்களையும் தெலுங்கில் மொழி பெயர்த்துள்ளார்.

உணர்ச்சிக் கவிதைகள் இயற்றுவதில் தலை சிறந்த முன்னேடியாக ராயப்ரோலு போற்றப் பட்டார். அனைத்து ஆந்திர முற்போக்கு எழுத்தாளர்களின் சங்கமான 'நவ்ய சாஹித்ய பரிஷத்'தின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்தச் சங்கம் நெடுங்காலம் அரிய பணிகளாற்றி வந்ததுடன் பல புதிய எழுத்தாளர்களையும் ஊக்குவித்தது. அவருடைய அறுபதாண்டு நிறைவு விழா விசாகையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. ஆந்திராவில் பல முக்கியப் பட்டணங்களிலும் அவர் கௌரவிக்கப்பட்டார். இந்திய சாஹித்ய அகாதெமியின் ஆலோசகராகவும், ஆந்திர பிரதேஷ் சாஹித்ய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் தற்பொழுது பணியாற்றி வருகின்றார்.

ராயப்ரோலுவுக்குத் தற்பொழுது வயது 69. இப்பொழுது அவர் செகந்தராபாத்தில் 'லலிதா குடீரில்' அமைதியான வாழ்க்கையைப் பயனுள்ள வகையில் வாழ்ந்து வருகிறார்.

புகைப்படம், தெலுங்கு பாஷா சமிதியின் இசைவு பெற்று வெளியிடப் பெறுகிறது.

அச்சு வேலையே நச்சு வேலை என்பர் சிலர்

ஆனல்,

அச்சு வேலையை அழகாகவும் குறித்த காலத்திலும் செய்துதர இதோ நாங்கள் இருக்கிறோம்

★

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் புத்தகங்களும், இருவர்ண மூவர்ணப் படப்புத்தகங்களும் அச்சிடுகிறோம்.

★

வெல்டன் பிரஸ்

146, திருவொற்றியூர் ஹைரோடு

சென்னை-21

இன்குலாப்

மூல ஆசிரியர் : **கே. ஏ. அப்பாஸ்**
தமிழாக்கம் : **எம். ஏ. அப்பாஸ்**
பதிப்பாளர் : **ஜெமினி பிரசுரம்**, சென்னை-6.
விலை: ரூ. 7.

ஆங்கிலத்தில் திறமையுடன் கதை கட்டுரைகள் எழுதிப் புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர்கள் சிலரில் குறிப்பிடத்தக்க ஒருவர் கே. ஏ. அப்பாஸ். அவருடைய சில சிறுகதைகளும் பெருங்கதைகளும் ஏற்கனவே தமிழில் வெளிவந்திருக்கின்றன. மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை ஆழ்ந்த அனுதாபத்தோடு உற்று நோக்கி, அழகான கதைகளை உருவாக்குவதில் கை தேர்ந்தவர் அவர். அவருடைய முக்கியமான வரலாற்றுப் பெருங் கதையான 'இன்குலாப்'—புரட்சி—இப்போது தமிழில் வெளிவந்திருக்கிறது. கே. ஏ. அப்பாஸ் ஆங்கிலத்தில் எழுதிய நாவலை எம். ஏ. அப்பாஸ் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இந்திய நாட்டின் வரலாற்றில் இந்த நூற்றுண்டின் முற்பகுதி மறக்கமுடியாத, மறக்கக் கூடாத, ஒரு கால கட்டமாகும். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அன்னியரின் அடிமைத்தளையில் அகப்பட்டுத் தவித்த நாடு, அந்தத் தளையிலிருந்து விடுபடுவதற்கு நடத்திய இறுதிப் போராட்டங்களின் சித்திரம்தான் இந்த 'இன்குலாப்'.

பயங்கரப் புரட்சியாளர்கள், பொதுவுடைமைக்காரர்கள், காந்தீய வாதிகள், மிதவாதிகள், துரோகிகள், தியாகிகள், சமஸ்தான மன்னர்கள், அரசாங்க ஊழியர்கள் இத்தகையோரது பல் வகைச் செயல்கள் நிறைந்த மிகப்பெரும் சூழ்நிலையே இந்தக் கதையின் பின்னணி. இவ்வளவையும் ஒன்றாக இணைத்து வைத்து, படிக்கும் முறையில் அமைத்துக் கதைச் சுவையோடு ஒன்றச்செய்வது என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. மிகச் சிரமமான இப்பணியை வியக்கத்தக்க முறையில் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார் ஆசிரியர்.

நாட்டின் விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகள் அவற்றின் உயிர்த்துடிப்போடு, உணர்ச்சிக் குமுறலோடு, தேசீய உணர்வோடு இதில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. காந்தியடிகளின் சாந்தப் புன்னகையையும், அவரது அமைதி நிறைந்த தீரப் புரட்சியையும் நாம் இதில் காணுகின்றோம். இன்னும் ஜவாஹர், சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங், டாக்டர் அன்ஸாரி, அகமது அலி போன்ற பலப்பல தேசபக்த வீரர்களையும் கதையினூடே அவர்களுடைய குணச்சித்திரங்களுடன் நாம் சந்திக்க முடிகிறது. பஞ்சாப் படுகொலை எனப்படும் ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்ச்சிகள் போன்றவை கண்ணெதிரில் காணும் உணர்வைத் தருகின்றன. சரித்திரச் சம்பவங்கள் ஒழுங்கான முறையில் வரிசைப்படுத்தப்பட்டுக் கலையழகுடன் இதில் சுடர்விடுகின்றன.

அன்வர் என்ற இளைஞனைக் கதாநாயகனாக வைத்துக்கொண்டு, அவனைச் சுற்றிலும் கதைப்போக்கைப் படரவிட்டிருக்கிறார் ஆசிரியர். காதலும், களிப்பும், பெருமூச்சும், ஏக்கமும் இடையிடையே தலைகாட்டுகின்றன என்றாலும், வெறும் கதைச் சுவைக்காக மட்டிலும் கதைபடித்து வழக்கப்பட்டவர்களுக்கு இதில் அவ்வளவாகச் சுவையிராது. காரணம், பொழுது போக்குகிறவர்களுக்காக எழுதப்பட்ட கதையல்ல இது. நாட்டுப்பற்றும் நன்றியுணர்ச்சியும் கொண்ட இன்றைய இளைஞர்கள் தங்களுக்கு முந்திய தலைமுறை நடத்திய போராட்டத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் கட்டாயம் இதைப் படிக்க வேண்டும்.

ஒருசில கதாபாத்திரங்களை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களுடைய வாழ்க்கையை

வெளியிட்டுக் கதை சொல்வது பெரும்பாலான நாவல்களில் காணப்படும் முறையாகும். ஆனால், உண்மையான வரலாற்றுப் பாத்திரங்கள் பலரையும் கற்பனைப் பாத்திரங்கள் சிலரையும் வைத்துக்கொண்டு உண்மையான நிகழ்ச்சிகளையே கதைபோலச் சொல்லியிருப்பது இதில் காணப்படும் புதுமுறையாகும். 'கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாதபடி' விரைந்து ஓடும் கதை ஓட்டத்தையும், புத்தகத்தை முடித்தவுடன் நினைவிலிருந்து ஓடிவிடும் கற்பனையையும் இதில் காண முடியாது தான். இந்தக் கதையின் கருப்பொருள் இருக்கிறதே, அது கருத்தைக் கிளறும் பொருள். மிக விசாலமான திரையில், அழகு மொழியில், கற்பனை நயத்தோடு வரையப் பெற்ற சித்திரம் இது. நமது விடுதலைப் போராட்ட காலத்தின் நினைவுச் சின்னம்.

எம். ஏ. அப்பாஸின் மொழிபெயர்ப்பு சரளமாகவும் எளிமையாகவும் இருக்கிறது. இனிய உயிரோட்டமுள்ள தமிழில் இதை மொழிபெயர்த்திருக்கிறார். கூடிய வரையில் மூலத்தின் அழகையும் அளவையும் அப்படியே கொண்டுவந்திருக்கிறார். சிற்சில இடங்களில் மட்டும் உருது-இந்தி மொழிச் சொற்கள் குறுக்கிடுகின்றன. தலைப்பும் 'இன்குலாப்' என்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலை நாட்டு வாசகர்களுக்கு இந்தியத் தன்மையை வலியுறுத்துவதற்காக மூல ஆசிரியர் வேண்டுமென்றே ஆங்கிலப் பதிப்பில் கையாண்ட சொற்களைத் தமிழிலும் அப்படியே கொடுத்திருப்பது அவசியமென்று தோன்றவில்லை.

இன்னும் ஒரு விஷயத்தை இங்குக் குறிப்பிடுவது தவறாகாது என்று நினைக்கிறேன். இந்த நாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்களைப் பற்றியும் பொதுப்படையாக ஆசிரியர் தம் கருத்தை ஓரிடத்தில் துணிவோடும் நடுநிலையில் நின்றும் வெளியிடுகிறார். இந்தப் பகுதியில் தென்னாட்டைப் பற்றியும் சில வரிகள் வருகின்றன.

"... தெற்கே குளுமையாகப் பச்சைபசேலென்றிருந்தது. இனிமையான பள்ளத்தாக்குகளினூடே நதிகள் பாய்ந்தோடின. கழனிகளிலே நெல்லும் கோதுமையும் விளைந்திருந்தன. மரங்கள் கனிகளைச் சுமக்க முடியாமல் திணறின. கீழே உதிரும் தேங்காய், மாங்காய், கொய்யாக்களைப் பொறுக்கினாலே வாழ்வதற்குப் போதும். அவன் இங்குச் சந்தித்த மக்கள் பணிவும் விருந்தோம்பும் பண்பும் படைத்தவர்களாகவும் காணப்பட்டார்கள்..."

இந்த இடத்தில் மூல ஆசிரியர் முக்கியமானதோர் கருத்தையும் குறிப்பிட்டிருக்கிறார் ..."but at the same time lazy and indolent."

தென்னாட்டவர்களுக்கே இயல்பான சோம்பலையும், தங்களை வருத்திக்கொண்டு சிரமப் படாமல் வாழ நினைக்கும் தன்மையையும் நடுநிலைத் துணிவோடு நயமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார் மூல ஆசிரியர். இதை மொழிபெயர்ப்பாசிரியரும் எடுத்துச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். தென்னாட்டவர்களாகிய நமது பண்புகள் அனைத்துமே பாராட்டுக்குரிய பண்புகள் என்று எதற்காக நாம் நம்பவேண்டும்?— வேண்டுமென்றே விடப்பட்ட சொற்கள் போல் எனக்குத் தோன்றுகின்றன.

இருந்தாலும், பொதுவாக நோக்கினால், இது மூலத்தின் சுவை குன்றாத, கருத்துச் சிதையாத, மொழிநயத்துடன் ஒன்றிய, தரமான மொழிபெயர்ப்புத்தான். தமிழில் வர வேண்டிய நூல்; வந்திருக்கிறது; வரவேற்போம்.

—'அகிலன்'

தெளிவாக எழுதுவோர், தெளிந்த ஊற்றுக்களைப்போல், நாம் நினைக்கின்ற அளவுக்கு ஆழமற்றவர்களாக உள்ளனர்; குழம்பியவர்களாகக் காணப்படுவோரே கருத்தாழமுள்ளவர்களாக உள்ளனர்,

—லாண்டர்

என் வரலாறு

மூலம் : ராஜேந்திர பிரசாத். தமிழாக்கம்: கோ. வன்மீகநாதன். வெளியீடு: சாகித்ய அகாதெமிக்காக, அமுத நிலையம், சென்னை-18. xvi + 1040 பக்கங்கள்; விலை ரூ. 20.

'நான் அறிந்த தலைவர்களிலே ராஜேன் பாபு விநயம் மிக்கவர். அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் எவரும் இல்லை' என்று காந்திஜியால் பாராட்டப்பெற்ற ஒப்பற்ற தலைவரின் புனித வரலாறு இது. எளிமையே உருவமாய், அடக்கமே உயிர்மூச்சாய், பணியே ஓர் அணியாகக் கொண்ட பண்பு மிக்கவரின் சொந்தக் கதை. ஆசிரியரின் எளிமையும் அடக்கமும் கதை சொல்லும் தன்மையில் நன்கு புலனுகின்றன. 1940-ல் எழுதத் தொடங்கி, 1942-45 சிறைவாசத்தில் தொடர்ந்து, 1946-ல் உடல் நிலை காரணமாகப் பிலானியில் ஓய்வு பெற்ற போது முடிக்கப்பட்டுள்ள இக்கதை, இடைக் காலச் சர்க்காரில் (1946 செப்டம்பர்)ஆசிரியர் மந்திரிப்பதவி ஏற்கச் செல்லுவதோடு முடிவடைகிறது. ஆசிரியரே கூறுகிறுர் :

> 'ஒரு வகையில் இந்த நினைவுமலர் ஒரு நல்ல நினைவுமலர்தான். ஏனெனில், இதில் எழுதும்போது நினைவுக்கு வந்த விஷயங்களே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதனுல், பல பெருமை வாய்ந்த விஷயங்களும் நிகழ்ச்சிகளும் சொல்லாமல் விடப்பட்டிருக்கலாம். சிற்சில இடங்களில் ஊர், பேர் முதலியவற்றைக் கூறுவதிலும் தவறு ஏற்பட்டிருக்கலாம். சில விஷயங்கள் தவறுக மனத்தில் பதிந்திருக்கலாம். அவையே இதில் வந்திருக்கலாம். ஆனுல், நான் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறமுடியும். அறிந்து தெரிந்து எந்தத் தவறுன விஷயமும் எழுதப்படவில்லை.'

சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, மாகாணத்திலேயே முதல்வராகத் தேறி, கல்கத்தாவில் கல்லூரிப் படிப்பும் சட்டக் கல்வியும் பெற்றது வரை ஒரு பருவம். இந்தப் பருவத்தில்தான் ஆசிரியர் தமது சொந்த விஷயங்கள் சிலவற்றைப் பற்றி அதிகம் கூறுகிறுர். பெருமைப்படத்தக்க பல சம்பவங்களைக்கூட போகிற போக்கிலே எளிதாகச் சொல்லிவிடுகிறுர். தாம் பிறந்த தேதியைக்கூடக் குறிப்பிடவில்லை.

ஜே. சி. போஸ், பி.சி. ராய் போன்ற மேதைகளிடம் கல்விபயிலும் பேறு பெற்ற மாணவராய்ச் சட்டம் பயின்று வக்கீல் தொழிலில் புகுந்து கல்கத்தாவிலும், பின்னர் பாட்னுவிலும் உயர்நீதி மன்றங்களில் சுடர்விட்டு ஒளிர்வது மற்ருெரு பருவம். இந்த நாட்களில் ஆசிரியர் அடைந்த அனுபவங்கள், வாழ்க்கையில் கற்ற புதுப் பாடங்கள், பேரறிஞர்களுடன் பழகித் தெரிந்து கொண்டவை எல்லாம் சுவைபட, தெளிவுடன் தரப்பட்டுள்ளன.

கோக்கலேயின் பழக்கம் கொண்டு, காங்கிரசில் சேர்ந்து, காந்திஜியுடன் தொடர்பு கொள்வதற்கு முன்னரே அரசியலில் புகுந்து விட்டார் பிரசாத். அப்போதைய அரசியல் 'நடவடிக்கை' பேச்சும் எழுத்துமே. சாம்பரான் ஜில்லாவில் அவுரி பயிரிடுவோர் ஆங்கிலேய முதலாளிகளிடம் பட்ட அல்லல்களை அகற்ற காந்திஜி அங்கு விஜயம் செய்ததிலிருந்து ராஜன் பாபுவின் வாழ்வில் மூன்ருவது பருவம் தொடங்குகிறது. பின்னர் அவருக்குத் தனி வாழ்க்கை என்று ஒன்று ஏது ? தேசத்தின் கதையே அவரது கதையாகிறது.

சுதந்திர உதயத்திற்காகப் புரிந்த பல்லாண்டுத் தவப்போரில் இன்பமும் துன்பமும் கலந்த எத்தனை சம்பவங்களை விவரிக்கிருர்! ஒழுக்கமும் தியாகமும் பண்பும் நிறைந்த எத்தனை சம்பவங்களை அறிமுகப் படுத்துகிருர்! கருத்து மாறுபாடு கொண்டவர்களிடமிருந்து நட்பையும் போலீஸ் அதிகாரிகளிடமிருந்துகூட மரியாதையையும் ராஜன் பாபுவால்தான் பெறமுடியும்! வரலாற்றின் நெடுக ஆசிரியர் கல்வி முறை, சமூகப் பழக்கங்கள், தொழில் முறை, பொதுப்பணி, அரசியல் நடவடிக்கைகள், தாய் மொழி போதனை, மொழிபெயர்ப்பு ஆகியவற்றைப் பற்றித் தமது தெளிவான கருத்துக்களை ஆங்காங்கே தூவிச் செல்கிருர். முழு நேர அரசியல்வாதி ஒருவரின் குடும்பப் பொருளாதாரம் எவ்வாறு சீர் குலைந்து விடுகிறது என்பதையும் மெல்லக் காட்டுகிருர். அரசியலைவிட ஆக்கவேலைகளி

லேயே ஆசிரியருக்குப் பற்று அதிகம் இருப்பது நன்கு தெரிகிறது. வெள்ளத்தின்போதும் பீகார் பூகம்பத்தின் போதும், பாட்னு முனிசிபல் தலைவராயிருந்தபோதும் அவர் ஆற்றிய தொண்டு ஒப்பற்றது.

நூலைப் படிக்கையில் ஒரு பெரிய மகானுடன் பழகும் உணர்ச்சியே உண்டாகிறது.

காந்திஜியின் 'சத்திய சோதனை'போல, ஜவஹர்லாலின் 'சுயசரிதை' போல, ராஜேந்திர பிரசாதின் 'என் வரலாறு'ம் நம் நாட்டின் தேசிய வரலாற்று நூல். மற்ற இரு நூல்களும் முன்னரே தமிழில் உள்ளன. 'என் வரலாறு' நன்கு தமிழ்ப் படுத்தப்பட்டுள்ளது.

மூல நூலைப் போலவே எளிய நடை கையாளப்பட்டுள்ளது. சில இடங்களில் ஹிந்தி வாக்கிய அமைப்புப் போலவே இருந்தாலும், அதனுல் படிக்கும் சுவை தடைப்படவில்லை. நூலின் தயாரிப்பும் அச்சும் நல்ல முறையில் உள்ளன.

சாகித்ய அகாதெமி உதவியுடன் அமுத நிலையம் கொணர்ந்துள்ள இந்நூலை வரவேற்கிருேம். மொழிபெயர்ப்பாளரைப் பாராட்டுகிருேம்.

இந்நூலின் சுருக்க அல்லது மலிவுப் பதிப்பு ஒன்று விரைவில் வெளிவரின், அனைவரும் வாங்கிப் படித்துப் பயனடையலாம்.

—டி. எஸ்.

ஆங்கில நூல்கள்

அமெரிக்க வரலாற்றை (கி.பி. 1492 லிருந்து 1961 வரை) ஐந்து கவர்ச்சிகரமான சிறிய மாணவர் பதிப்புக்களாக, நியூயார்க்கிலுள்ள ஃபாசட் பதிப்பகத்தார் (Fawcett Publications) வெளியிட்டுள்ளனர். இவை, 'அமெரிக்கன் ரீடரி'லிருந்து, பால் எம். ஆங்கிள் (Paul M. Angle) என்பவரால் தயாரிக்கப்பட்டவை. "நேரில் கண்டவர்களின் கடிதங்கள், அவ்வக் காலத்தில் வாழ்ந்தவர்களின் நாட்குறிப்புக்கள், தினத்தாள்களிலிருந்து செய்திக்குறிப்புக்கள், மற்றும் இவற்றைப் போன்ற பிற குறிப்புக்களையும்" கொடுத்து அமெரிக்க நாட்டின் பழைய காலத்தைப் படக்காட்சிகளைப் போல இப்புத்தகங்கள் நம் கண் முன்னர் நிறுத்துகின்றன.

பர்டு (Purdue) பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராபர்ட் கூறியதுபோல் "இந்தத் தொகுப்பு தனிப்பட்ட வகையிலும், வரலாற்றுத் துறையிலும் நிகழ்ந்த சிறந்த நிகழ்ச்சிகளுக்கே படிப்பவரைக் கொண்டு சென்று விடுகின்றது." 'முடிந்த நிறைவுபெற்ற வரலாற்றுத் தொகுப்பு இது' என்று அவர்கள் சொல்லிக் கொள்ளவில்லை எனினும், சாதாரண வகுப்பறை நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலியவற்றிலிருந்து இத்தொகுப்பு வேறுபட்டது என்பது உண்மையே. ஒவ்வொன்றும் 15 செண்ட் விலையுள்ள இந்த ஐந்து நூல்களின் பெயர்கள் முறையே:

"ஒரு புதிய கண்டமும் ஒரு புதிய நாடும்," "நாடு வளர்கிறது," "இரண்டுபட்ட நாடு," "உலக ஆற்றலாக வளர்தல்," "குழம்பிய உலகம்."

இந்த ஐந்து நூல்களையும் நியூயார்க் பதிப்பகத்தாரிடமிருந்து நன்றி அறிதலுடன் பெற்றுக் கொள்கிருேம்.

*   *   *

நியூயார்க்கிலுள்ள 'பாலண்டைன் புக்ஸ்' (Ballantine Books) பதிப்பகத்தாரிடமிருந்து வரப்பெற்ற நூல்கள்:

1. "பெர்லின்"—ஜெர்மன் விதியின் மையம் (சார்லஸ் பி. ராப்சன் மொழிபெயர்த்துப் பதிப்பித்த கட்டுரைத் தொகுப்பு).
2. "டலை லாமா"—லவல் தாமஸ் (ஜூனியர்)—(நாடு கடந்த திபெத் தலைவரின் வாழ்க்கை வரலாறு)
3. "ஒன்றி வாழும் (Co-existence) பெரும் பிரச்சினை"—மில்டன் கோவ்னர்.

—ஆசிரியர்

அண்மையில் வெளிவந்த தமிழ் நூல்கள்

	ரூ.	நபை.
வள்ளுவர் பண்ணை, 137, பிராட்வே, சென்னை-1		
இந்தியப் பெரியார்கள் —டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்	3	00
தமிழால் முடியும் சி. சுப்பிரமணியம்	3	00
வளரும் சக்தி —சி, சுப்பிரமணியம்	3	00
சாதனைக்குரிய சிந்தனைகள் —சி. சுப்பிரமணியம்	2	50
வெற்றி முழக்கம் —நா. பார்த்தசாரதி	7	50
பட்டுப் பூச்சி —நா. பார்த்தசாரதி	3	00
தமிழ்ப் புத்தகாலயம், 394, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14		
அண்ணனும் தம்பியும் —மாப்பசான்	3	00
திருஈங்கோய்மலை எழுபது —பாலூர் கண்ணப்ப முதலியார்	3	00
மீனுட்சி புத்தக நிலையம், 60, மேலக்கோபுர வாசல், மதுரை		
பனிமலை —மகரிஷி	4	50
யாருக்காக அழுதான் ? —ஜெயகாந்தன்	2	00
உழவு நங்கை —கவிஞர் சோமசுந்தரனுர்	3	75
பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1		
பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள் (இரண்டாம் தொகுதி) —அழ. வள்ளியப்பா	1	00
பாட்டுப் பாடுவோம் (2-வது பதிப்பு) —அழ. வள்ளியப்பா	1	50

	ரூ.	நபை.
பாரி நிலையம்		
ஹாம்லெட் —ஷேக்ஸ்பியர் —தமிழில் : எஸ். மகராஜன்	2	75
இந்தியத் தரை இயல் —சு. மாணிக்கம்	6	20
செம்மீன் —மலையாள மூலம் : தகழி சிவசங்கரன் பிள்ளை —தமிழில் : சுந்தர ராமசாமி	5	00
தஞ்சாவூர் மாவட்டம் —'சோமலெ'	6	00
வட ஆர்க்காடு மாவட்டம் —'சோமலெ'	3	00
பழனியப்பா பிரதர்ஸ், 4, வெங்கடேச நாயக்கன் தெரு, சென்னை-5		
காந்தி வாழ்க்கை —லூயி பிஃஷர் —தமிழில் : தி. ஜ. ர.	15	00
சாகுந்தலம் —நவாலியூர் சோ. நடராசன்	3	00
சாந்தி நூலகம், 2/122, பிராட்வே, சென்னை-1		
தமிழர் வாழ்வு —டாக்டர் மா. இராசமாணிக்கனுர்	3	00
அறுமணிகள் —அ. சுகுமாரன்	0	50
நாலடிப் பாதை —அ. சுகுமாரன்	0	75
கொக்கரக்கோ —அழகனுர்	1	50

தமிழ் எழுத்தாளர் யார்-எவர்?

★

எழுத்துலகின் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுப் பணியாற்றி வரும் 563 தமிழ் நூலாசிரியர்களைப் பற்றிய விவரங்களைத் தொகுத்துக் கூறும் முதல் நூல் இதுவே.

தமிழ் எழுத்தாளர்களின் பெயர், முகவரி, அவர்கள் அறிந்த பிற மொழிகள், எழுதியுள்ள நூல்கள், மொழி பெயர்ப்புக்கள், மற்றும் சில குறிப்பிடத்தக்க செய்திகள் ஆகியவற்றை இத்தொகுப்பில் காணலாம்.

இத்தொகுப்பின் இறுதியில், பிற மொழிகளில் நூல் இயற்றியுள்ள தமிழ் எழுத்தாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் ஆகியோர் பட்டியலும், ஆங்கிலத்தில் எழுத்தாளர் பெயர் அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளன.

★

விலை 1 ரூபாய்

(தபால் செலவு தனி)

★

தென்மொழிப் புத்தக டிரஸ்ட்

25, ஸ்டெர்லிங் ரோட்

சென்னை - 34

தென்மொழிப் புத்தக டிரஸ்ட் புதிய வெளியீடுகள்

	ரூ.	நயை.
உல்லாச விளையாட்டுக்கள் —பி. ஆர். சுப்பிரமணியம் —டி. பி. சந்தானகிருஷ்ண நாயுடு	1	95
புதிய சீனு —மூலம்: டாக்டர் எஸ். சந்திரசேகர் தமிழில்: எம். ஏ. அப்பாஸ்	2	25
சிவனிப்பள்ளியின் கருஞ் சிறுத்தை —மூலம்: கென்னத் ஆண்டர்சன் —தமிழில்: எஸ். சங்கரன்	1	95
தென் மொழிகளில் பழமொழிகள் —தொகுத்தோர்: டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை டாக்டர் எஸ். கே. நாயர் எம். மரியப்ப பட் என். வெங்கடராவ்	1	95
விஷமக் கோபுவின் விசித்திர யாத்திரை —தெலுங்கு மூலம்: வாசமூர்த்தி —தமிழில்: பாலகுரு	1	75

FORTHCOMING BOOKS:

Tamil

1. 'Crime and Detection'
—By N. Krishnaswamy
2. 'Black Panther of Sivanipalli' (II Part)

இயந்திரச் சாதனை

தானே இயங்கும் கடை

ஒரு பல-அடுக்கு, தானே இயங்கும் இயந்திரம், சூடான அல்லது குளிர்ச்சியான பானங்கள், உணவுப் பொருள்கள், இனிப்புக்கள், சிகரெட்டுகள், மற்றும் பலவகைப் பொருள்களையும் இருபத்து நான்கு மணி நேரமும் கொடுக்கிறது. ஒருவர் தான் விரும்பும் பொருளுக்குரிய காசை அந்த இயந்திரத்திற்குள் போட வேண்டும்; எந்த வகையில் சில்லறைக் காசைப் போட்டாலும், மொத்தம் எந்த அளவு வேண்டுமோ அந்த அளவு எடுத்துக்கொண்டு, மிச்சம் சில்லறை கொடுக்கவேண்டி இருப்பின் அதையும் அந்த இயந்திரம் கொடுத்துவிடும். இதை உருவாக்கிய பிரிட்டானியத் தயாரிப்பாளர்கள், இந்த இயந்திரத்தைச் சிறிதளவு மாற்றி எல்லாவகைப் பொருள்களையும் விநியோகிக்கப் பயன்படுத்தமுடியும் என்று கூறுகின்றனர்.

CONNEMARA PUBLIC LIBRARY